AR
49

மடம்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை– 600 008
2016, திருவள்ளுவர் ஆண்டு – 2047

மடம்

பதிப்பாசிரியர்
முனைவர் **தா. கார்த்திகேயன்,** இஆப.,
ஆணையர்

ஆசிரியர்
செ. உலகையா

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2016, திருவள்ளுவர் ஆண்டு- 2047

அச்சிட்டோர் விவரம்

நூல் தலைப்பு : மடம்

பதிப்பாசிரியர் : முனைவர் தா. கார்த்திகேயன், இஆப.,
ஆணையர்

ஆசிரியர் : செ. உலகையா

பதிப்புரிமை : தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை

வெளியீடு எண் : 278

முதற்பதிப்பு : 2016

மொழி : தமிழ்

எழுத்து : 12 புள்ளிகள்

பிரதிகள் : 1000

தாள் : 80 Gsm. Maplitho

பக்கங்கள் : 160

விலை : ரூ. 80.00

அச்சிட்டோர் : சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு சங்கம்,
நெ. 6, பைகிராப்ஸ் ரோடு,
(பாரதி சாலை), திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.

பொருளடக்கம்

பதிப்புரை

1. ஊர் வரலாறு ... 1
2. தடாகபுரீசுவரர் கோயில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை ... 4
3. செப்புத் திருமேனிகள் ... 24
4. திருவிழாக்களும் வழிபாடுகளும் ... 28
5. பிற கோயில்கள் ... 31
6. கல்வெட்டு செய்திகள் ... 36
7. பிற்சேர்க்கை
   - மடத்தைச் சுற்றியுள்ள ஊர்கள் ... 67
   - கல்வெட்டு வாசகங்கள் ... 71
   - ARE Report ... 115

நிழற்படங்கள் ... 135

முனைவர் **தா. கார்த்திகேயன்,** இ.ஆ.ப.,
ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
தமிழ்ச் சாலை
சென்னை- 600 008

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழகத்திலுள்ள கல்வெட்டுகள், தொல்லியல், அகழாய்வு, தமிழகக் கோயில்களின் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியம், செப்புத்திருமேனிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாக மாணவர்கள் கற்கவேண்டி 1973-74-ஆம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை நிறுவியது. இக்கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஆண்டுதோறும் முதுகலைப் பட்டம் பெற்ற எட்டு மாணவர்களுக்கு ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ என்னும் முதுநிலைப் பட்டயம் ஒன்றினை வழங்குகிறது. இதுவரை இப்பயிற்சி நிறுவனத்தில் 219 மாணவர்கள் பயின்றுள்ளனர்.

இம்மாணவர்களது பயிற்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட கோயிலைத் தேர்வு செய்து, அக்கோயில் அமைந்துள்ள ஊரைப்பற்றியும், அங்குள்ள பிற முக்கியமான கோயில்களைக்

குறித்தும் விரிவாக ஆய்வு செய்து ஆய்வேடு ஒன்றினைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாய்வேடுகளில் இதுவரை 32 ஆய்வேடுகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 1994-95 ஆம் ஆண்டு பயின்ற திரு. செ. உலகையா அவர்கள் எழுதிய '**மடம்**' என்னும் ஆய்வேடு தற்போது 33-ஆவது நூலாக வெளிவருகிறது. இந்நூலின் மூலம், 'குளந்தை வளம்பதி' என்னும் கல்வெட்டு வரிகளால் இவ்வூர் ஒரு காலக்கட்டத்தில் 'குளந்தை' எனவும், '. . . . பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர்' என்னும் கல்வெட்டு வரிகளால் 'குளத்தூர்' எனவும் அழைக்கப்பட்ட இவ்வூரானது, 'மடத்து உடையார்' என இவ்வூர் இறைவனை விஜயநகர காலத்திய ஒரு கல்வெட்டு குறிப்பிட்டுள்ளதனால், காலப்போக்கில் 'மடம்' என வழங்கலாயிற்று என்ற செய்தி அறியப்படுகிறது. மேலும், இவ்வூரில் அமைந்துள்ள 'ஸ்ரீதடாகபுரீஸ்வரர்' கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலைகளைப் பற்றியும், கோயில் கல்வெட்டுகளின் மூலம் அக்கால அரசியல், சமுதாய பொருளாதாரச் செய்திகளையும் விரிவாக அறியலாம்.

மேலும், இக்கோயிலானது அரசாணை நிலை எண்: 46, தமிழ்நாடு வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ2) துறை, நாள்:27.02.2001-இன்படி தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணை தமிழ்நாடு அரசிதழ் பகுதி- 2, பிரிவு- 2-இல் 28.03.2001 புதன்கிழமையன்று வெளியாகியுள்ளது.

'மடம்' என்னும் இந்நூல் பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்ட இத்துறை தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் முனைவர். சீ. வசந்தி, உதவி கண்காணிப்பு கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் மற்றும் கல்வெட்டாய்வாளர் திருமதி. கி. பாக்கியலட்சுமி ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள். மேலும் இந்நூலினை நல்ல முறையில் அச்சுப்பிழைத்திருத்தம் செய்த திருமதி. ச. சரஸ்வதி அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள்.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் 2015-2016-ஆம் ஆண்டில் பத்து மாணவர்களின் ஆய்வேடுகள் நூலாக்கம் செய்வதற்கு நிதியுதவி நல்கி சிறப்பிக்கும் தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வரலாற்று மாணவர்களுக்கும், தொல்லியல் மாணவர்களுக்கும், தொல்லியல் ஆர்வலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆணையர்

ஊர் வரலாறு

நிலஅமைப்பு

திருவண்ணாமலை மாவட்டம் (வட ஆற்காடு) வந்தவாசி வட்டத்தில் மடம் கிராமம் அமைந்துள்ளது. திண்டிவனம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 36.8 கிலோ மீட்டர் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. மடத்திற்கு வந்தவாசியிலிருந்து செய்யார் செல்லும் பேருந்துகளில் சென்று ஏந்தல் விலக்கில் இறங்கி ஐந்து கிலோ மீட்டர் செல்ல வேண்டும். மிகக் குறைவான பேருந்துகளே மடத்திற்குச் சென்று திரும்புகின்றன.

இவ்வூருக்குத் தெற்கில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் தென்னாற்றூர் அமைந்துள்ளது. வடக்கில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் ஏந்தல் என்னும் கிராமமும், மேற்கில் ½ கிலோ மீட்டர் தூரத்தில் இசா குளத்தூரும், கிழக்கில் 2½ கிலோ மீட்டர் தொலைவில் தேசூரும் அமைந்துள்ளன. மேலும் கிழக்கில் சோலை அருகாவூர், ஆர்யம்பூண்டி ஆகியவையும் வடகிழக்கில் ஆழியூரும், மேற்கில் கல்யாணபுரமும் அமைந்துள்ளன.

நிலவளம்

மடம் கிராமம் மொத்தம் 420.43 ஏக்கர் நிலத்தினைக் கொண்டுள்ளது. இதில் விவசாயத்திற்கு பயன்படக் கூடிய நிலம் 419.26 ஏக்கர் ஆகும். இந்நிலத்தில் நல்ல செழிப்பான வயல்வெளிகள் உள்ளன. இங்கு நெல், கரும்பு போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. புன்செய் நிலத்தில் நிலக்கடலை

போன்ற எண்ணெய் வித்துக்கள் பயிர் செய்யப்படுகின்றன. இவ்வூரிலுள்ள இசா ஏரி நீர்ப்பாசனத்திற்கு பெரிதும் பயன்தருகிறது.

மேலும் அண்ணாமலைக் குட்டை, வெங்கால அம்மன் குட்டை, சுடுகாடு குட்டை, அய்யப்பன் குளம், கிருஷ்ணதாஜ் குளம், பனிச்சவன் குட்டை, பீமமுதலிக் குட்டை, முனிக் குட்டை, தாமரைக் குட்டை ஆகிய குளங்களும், குட்டைகளும் இவ்வூரைச் செழுமைப்படுத்துகின்றன.

இவ்வூரில் ஆங்காங்கே சிறு சிறு குன்றுகள் காணப் படுகின்றன. இவற்றில் ராஜாக் கல், சறுக்குப் பாறை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஏனெனில், வரலாற்றுச் சிறப்புடைய கல்வெட்டுகள் இங்கு பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டில் மடம்

பல்லவன் கம்பவிக்ரமவர்மனின் காலத்திய கல்வெட்டில் “ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர்” என்ற குறிப்பு காணப்படுகிறது. எனவே இவ்வூர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ‘குளத்தூர்’ என்றழைக்கப்பட்டுள்ளது. மேலும் சோழர் காலக் கல்வெட்டுகளிலும் ‘குளத்தூர்’ என்றே அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விசயநகரர் காலத்தில் கூளி மாராயனின் பாடல் கல்வெட்டு இவ்வூரை ‘வளம்பதி’ என்று அழைத்துள்ளது. குளத்தூர் என்பதை குளந்தை என்றும் அழைத்துள்ளார்கள். கி.பி. 1363 - ஆம் ஆண்டைச் சார்ந்த ஒரு கல்வெட்டு இவ்வூர் இறைவனை ‘மடத்து உடையார்’ என்று அழைக்கிறது. எனவே,

இக்காலக்கட்டத்தில்தான் இவ்வூரில் சிறந்து விளங்கிய மடம் மற்றும் அதன் சமுதாய சமயப் பங்கின் காரணமாக இவ்வூர் மடம் என்று பெயர் மாற்றம் அடைந்திருக்கவேண்டும். ஆகவே, ‘குளத்தூர்’ என்று பல்லவர், சோழர் காலத்தில் அழைக்கப்பட்ட இவ்வூர் விசயநகரர் காலத்தில் ‘மடம்’ என்று பெயர் மாற்றம் அடைந்திருக்கிறது எனலாம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ‘மஸ்தான் சுவாமிகள்’ என்பவர் திருவண்ணாமலை ரமண மகரிஷியின் சீடராக இருந்து இவ்வூர் மடத்தின் நடவடிக்கைகளைச் செய்திருக்கிறார். இவ்வூரின் மண்டபச் சிற்பங்களும், கல்வெட்டுகளும் ருத்ர மாகேஸ்வரர் என்ற சிவனடியார்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. விசயநகரர் காலத்தில் புவனேகவாகு என்பவர் இவ்வூர் மடத்தில் சிறந்த நிர்வாகியாக விளங்கியிருக்கிறார். இதுபோன்ற காரணங்களால் குளத்தூர் என்ற பண்டைய பெயர் மறைந்து மடம் என்ற பெயர் நிலைத்து விட்டது. இவ்வூருக்கு அருகில் ‘இசா குளத்தூர்’ என்ற பெயரில் ஊர் ஒன்று உள்ளது. பண்டைய குளத்தூர் என்பது ஊரின் ஒரு பகுதியாக இருந்ததால் அப்பெயர் நிலைத்துள்ளது எனலாம்.

தடாகபுரீசுவரர் கோயில் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை

அமைப்பு

தடாகபுரீசுவரர் கோயில் விமானம், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளைக் கொண்டு கிழக்கு நோக்கி விளங்குகிறது. இது பிரஸ்தரம் வரை கல்லாலும் அதற்கு மேல் செங்கல் சுதையாலும் கட்டப்பட்ட கோயிலாகும். இக்கோயில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக இருக்கலாம். கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் தவிர ஏனைய கட்டடப் பகுதிகள் கோயில் எடுக்கப்பட்ட காலத்திற்குச் சற்று பிந்தியவையாகும்.

கருவறை மற்றும் அர்த்தமண்டபம்

கருவறையின் சுவர்ப்பகுதி பல கால் வரிகளையும் தேவ கோட்டங்களையும் கொண்டு விளங்குகிறது. கருவறையின் அதிட்டானப் பகுதி கம்பு, ஜகதி, முப்பட்டைக் குமுதம், கம்பு கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு, கண்டம், கம்பு, வேதிகை, கம்பு ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. பித்திப் பகுதியில் உள்ள தேவகோட்டங்கள் கபோத அமைப்புடன் கூடிய சாலையினைத் தோரணமாகக் கொண்டுள்ளன. கோட்டத்தை அடுத்து இரண்டிரண்டாகத் தூண்கள் அழகு செய்கின்றன.

கருவறையின் விமானப் பகுதி கலசம், குடம், பத்மம், பலகை, வெட்டிய முனை இல்லாத போதிகை ஆகியவற்றைக்

கொண்டுள்ளது. பிரஸ்தரப் பகுதி பூதவரி, கபோதம் (யாளிவரி) ஆகியவற்றைப் பெற்றுள்ளது. அர்த்தமண்டபப் பிரஸ்தர அமைப்பு கருவறையை ஒத்து காணப்படுகிறது.

தட்சிணாமூர்த்தி

கருவறைத் தென்புறக் கோட்டத்தில் தட்சிணா மூர்த்தி சிற்பம் உள்ளது. இத்தேவகோட்டத்தின் முன் சிறு மண்டபம் எடுத்து உள்ளனர். தட்சிணாமூர்த்தி வீராசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். இடது காலை வலது கால் மேல் தூக்கி மடித்து அமர்ந்த நிலையில் அமர்ந்திருக்கின்றார். பின்னிரு கரங்களில் தீ ஜ்வாலை மற்றும் அக்கமாலையுடன் காட்சி தருகிறார். தலையில் ஜடாபாரம் அலங்கரிக்கிறது. காலுக்கு கீழ் அபஸ்மாரனை மிதித்துக் கொண்டிருக்கிறார். அருகில் சனகாதி முனிவர்கள் அமர்ந்துள்ளனர். தட்சிணா மூர்த்திக்குப் பின்னால் ஆலமரம் ஒன்று உள்ளது. இச்சிற்பம் கருவறை எடுக்கப்பட்ட கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

விஷ்ணு (திருமால்)

கருவறையின் மேற்குத் தேவகோட்டத்தில் திருமால் பத்ம பீடத்தின் மீது சமபங்கமாக நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். இவரது உயரம் 115 செ.மீ. ஆகும். திருமாலின் நான்கு கரங்களில் பின்னிரு கரங்கள் சங்கு, சக்கரம் ஏந்தியும், முன்னிரு கரங்கள் அபய, கடி வலம்பித முத்திரைகளுடன் காட்டப்பட்டுள்ளன.

பிரம்மன்

நான்முகனான பிரம்மன் கருவறையின் வடபுறம் உள்ள தேவகோட்டத்தில் பத்ம பீடத்தில் சமபங்கமாக நின்ற நிலையில் மூன்று முகங்களுடன் காட்சியளிக்கிறார். கழுத்தில் பட்டையான மணி ஆரங்கள், உதரபந்தம், மார்பில் முப்புரி நூல், இடுப்பில் கிம்புரி முகத்துடன் கூடிய கடிபந்தம் அணிந்துள்ளார்.

நான்கு கரங்களில் முன்னிரு கரங்கள் அபய, கடி வலம்பித முத்திரையுடனும், பின்னிரு கரங்களில் அக்கமாலை, கமண்டலம் ஏந்தி விளங்குகிறார்.

கணபதி

அர்த்தமண்டபத் தெற்கு தேவகோட்டத்தில் நர்த்தன கணபதி (85 செ.மீ. உயரம்) ஒரு காலை சாய்த்து ஊன்றி திரிபங்கமாக நிற்கிறார். நான்கு கைகளுடன் இவர் விளங்குகிறார். தலையில் கரண்ட மகுடம், மார்பில் முப்புரிநூல், அணிந்திருக்கிறார். பின்னிரு கரங்களில் அங்குசமும், பாசமும், முன்னிரு கரங்களில் தந்தமும், மோதகமும் உள்ளன. துதிக்கை முன் இடது கரத்தில் உள்ள மோதகத்தை எடுக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது.

கொற்றவை (துர்கை)

அர்த்த மண்டபத்தின் வடபுற தேவகோட்டத்தில் கொற்றவையின் உருவம் பத்ம பீடத்தின் மீது சமபங்கமாக நான்கு கைகளுடன் உள்ளது. பின்னிரு கரங்களில் சங்கு, சக்கரமும், முன்னிரு கரங்களில் அபயம், கடி வலம்பித ஹஸ்த முத்திரைகளுடன் காட்சியளிக்கின்றன.

முன்மண்டபம்

முன்மண்டபம் கருவறையை ஒத்த கலைப்பாணியில் அமைந்துள்ளது. பித்திப்பகுதியில் நீண்ட இடைவெளி விட்டு நான்கு துாண்கள் காணப்படுகின்றன. கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் ஆகியவற்றை ஒட்டி இரண்டடி இடைவெளியில் திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது.

திருச்சுற்று மாளிகை

திருச்சுற்று மாளிகை பல துாண்களைக் கொண்டு காட்சியளிக்கின்றது. முன் மண்டபத்தின் வாயிலில் தெற்குப்

புறம் விநாயகர் பத்மபீடத்தில் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார். பின்னிரு கரங்களில் அங்குசம், பாசம், முன்னிரு கரங்களில் தந்தம், மோதகமும் கொண்டு விளங்குகிறார். தலையில் கரண்ட மகுடம் அணிசெய்கின்றது. மார்பில் முப்புரிநூல் அணிந்து வீற்றிருக்கிறார்.

அப்பர்

திருச்சுற்று மாளிகையின் தென்மேற்குப் பகுதியில் சிறிய 35 செ.மீ. உயரமுடைய ஏழு அடியவர்களடங்கிய சிற்பத் தொகுதி காணப்படுகிறது. இந்த சிற்பத் தொகுதியில் திருநாவுக்கரசர் என்றழைக்கப்படும் அப்பர் சமபங்கத்தில் நின்ற நிலையில் தலை மற்றும் கழுத்தில் உத்ராட்ச மணி அணிந்தும், காதுகளில் பத்ர குண்டலம் அணிந்தும் காணப்படுகின்றார்.

சப்த மாதர்கள்

தெற்குத் திருச்சுற்று மாளிகைச் சுவரில் சப்த மாதர்கள் தங்களின் வாகனங்களில் வீற்றிருக்கிறார்கள். சப்தமாதர்களோடு வீரபத்ரர் மற்றும் விநாயகரும் காட்சியளிக்கின்றனர்.

சப்தமாதர்களின் வாகனங்கள்

1. பிராமி - அன்னம்,
2. மாகேஷ்வரி - ரிசபம்,
3. கௌமாரி - மயில்,
4. வைஷ்ணவி - கருடன்,
5. வராகி - பன்றி,
6. இந்திராணி - யானை,
7. சாமுண்டா - மனித உருவம்.

தெற்கு திருச்சுற்றுச் சுவரில் பிற்கால கட்டடப் பணிக்காக செங்காவியால் கட்டட வரைபடம் வரையப்பட்டுள்ளது. இது அதிட்டானப் பகுதியில் காணப்படுகிறது.

விநாயகர்

திருச்சுற்று மாளிகையின் கன்னி மூலையில் விநாயகருக்கு ஒரு மண்டபத்துடன் கூடிய சந்நிதி காணப்படுகிறது. விநாயகர் சந்நிதிக்கு முன்பு சிறிய பலிபீடம் ஒன்றும் காணப்படுகிறது. விநாயகர் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் பின்னிரு கரங்களில் அங்குசம், பாசம், முன்னிரு கரங்களில் தந்தம், மோதகம் கொண்டு விளங்குகிறார். இடையில் கச்சையுடனும், மார்பில் முப்புரிநூலுடனும், தலையில் பட்டியுடன் கூடிய மணி ஆரங்களுடனும் காணப்படுகிறார்.

சகஸ்ரலிங்கம்

திருச்சுற்று மாளிகையின் மேற்குப்புறம் ஐந்து வகையான லிங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று ருத்ரபாகத்தில் 1008 லிங்கங்கள் கூடிய சகஸ்ரலிங்கமும் அதன் முன்பு ஒரு அழகிய நந்தியும் உள்ளது. திருநந்தியின் முகத்தில் தோன்றும் புன்னகையின் அழகும், பார்வையின் குறும்பும், நம் நெஞ்சைக் கிள்ளுகின்றன. நந்தியின் குறுகிய கொம்புகளில் காணப்படும் நெற்றிப் பட்டமும், கழுத்திலும், முதுகிலும் தவழும் மணிச்சரங்களும், முதுகில் அணிந்திருக்கும் வேலைப்பாடுகள் நிரம்பிய பட்டுப் பீதாம்பரமும் சிற்பியின் கைவண்ணத்தையும், கலையுணர்வையும் பறைசாற்றுகின்றன.

வீணாதர தட்சிணாமூர்த்தி

சகஸ்ரலிங்கங்கத்திற்கருகே வீணாதர தட்சிணா மூர்த்தி 55 செ.மீ. உயரத்துடன் உத்குடி ஆசனத்தில் வீற்றிருக்கிறார்.

முருகன்

வீணாதர தட்சிணாமூர்த்தி சிற்பத்திற்கு சற்று பின்புறம் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முருகன் உருவம் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டு காணப்படுகிறது. நான்கு கைகளுடனும் நெற்றியில் கன்னிமாலை, கொன்றை மாலையுடன் காட்சியளிக்கிறது.

சண்டேசுவரர்

திருச்சுற்றின் வடக்குப்புறத்தை நோக்கி கருவறை, அர்த்த மண்டபத்துடன் கூடிய ஒரு சிறிய கோயில் சண்டேசுவரர்க்கு எடுக்கப்பட்டுள்ளது.

விஷ்ணு (திருமால்)

இக்கோயிலின் பின்புறம் திருமால் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் கிரீட மகுடம், பின்னிரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியும், முன்னிரு கரங்களில் அபயம், லோல ஹஸ்தம் கொண்டும் விளங்குகிறார். காதுகளில் மகர குண்டலம், மார்பில் உபவீதம், இடையில் பீதாம்பரம் அணிந்து காட்சியளிக்கிறார்.

திருச்சுற்று மதில் மாடங்கள்

திருச்சுற்று உள் வடபுறம் உள்ள சுவர்களில் இரண்டு மாட அமைப்பு காணப்படுகின்றன. முதலில் துர்க்கை சிற்பம் ஒன்று உள்ளது. நின்ற நிலையில் நான்கு கைகளுடன் பின்னிரு கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியும், முன்னிரு கரங்களில் அபயம், ஊருஹஸ்தம் கொண்டும் விளங்குகிறது. இடைக்கச்சை அணிந்து காணப்படுகின்றது. மார்பில் கச்சை

அணியவில்லை. காதுகளில் மகர குண்டலமும், தலையில் கிரீட மகுடமும், கழுத்தில் நகைகளும், மணி ஆரங்களும் அலங்கரிக்கின்றன. இச்சிற்பம் 105 செ.மீ. உயரம் கொண்டதாக அமைந்துள்ளது.

நவகிரகங்கள் மற்றும் பிற சிற்பங்கள்

திருச்சுற்றின் வடபுறத்தில் 40 செ.மீ. உயரம் கொண்ட நவகிரகங்கள் சிற்பத் தொகுதி மேடை அமைத்து வைக்கப் பட்டுள்ளது. இது பிற்காலத்தைச் சார்ந்தவையாகும். கருவறை, அர்த்தமண்டப, இடைநாழிப் பகுதிக்கு நேர் வட திருச்சுற்றில் சண்டிகேஸ்வரர் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

திருச்சுற்றின் கிழக்குப் பக்கத்தில் வடகிழக்கு மூலையில் பைரவர் நான்கு கைகளுடன், தலையில் ஜடாமகுடம், காதுகளில் பத்ர குண்டலம் அணிந்து பக்கத்தில் வாகனமான நாயுடன் காட்சியளிக்கிறார்.

அதனருகில் ஒரு லிங்கமும், ஒரு சிறிய பலிபீடமும் காணப்படுகின்றன. அதற்கும் சற்று அருகில் (பைரவர் சந்நிதிக்குத் தெற்கில்) சூரியன் சிற்பம் இரண்டு கைகளுடன் தலைக்குப் பின்னால் ஒளி வட்டங்களுடன் நின்ற நிலையில் காட்சியளிக்கிறது.

சூரியன் சிற்பத்திற்கு மேற்கில், வாயில் ஓரம் முருகன், வள்ளி, தெய்வானையுடன் நேர்த்தியாகக் காட்சியளிக்கிறார்.

அம்மன் சந்நிதி

சுற்றுப்பிரகார வாயிலில் காட்சி தரும் சுப்ரமணியர் மற்றும் விநாயகரை வணங்கி கோயிலினுள் நுழைந்தால் முன் மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் அம்மன் சந்நிதி உள்ளது.

அம்மன் பெரிய நாயகி என்று அழைக்கப்படுகிறார். அம்மன் சிற்பத்தை வெளியிலிருந்து எடுத்து வந்து தனியாக மேடை அமைத்து வழிபாட்டில் வைத்து வணங்கி வருகிறார்கள். கல்வெட்டில் குறிப்பிடப்படும் அம்மன் இதுவே ஆகும்.

ஒரு மீட்டர் உயரம் கொண்ட அம்மன் அகிலாண்ட நாயகியாகிய அன்னை உமையன்னை இங்கே பெரியநாயகி எனும் திருநாமம் பூண்டுள்ளார். அன்னையின் எடுப்பான திருவுருவம் ஈடு இணையில்லாத பேரழகு வாய்ந்தது.

நான்கு கரங்களில் பின்னிரு கரங்களில் மலர் ஏந்தியும், முன்னிரு கரங்களில் அபய, வரத ஹஸ்த முத்திரையுடனும், அன்னை நிற்கும் கம்பீரத்தையும், அழகையும் காணக் கண் கோடி வேண்டும். எழிலையெல்லாம் கடந்த எழிலரசியாக திகழும் பெரிய நாயகி அழகுப்பதுமையாக காட்சியளிக்கிறார்.

முன் மண்டபத்தில் பல தூண்கள் விதானத்தைத் தாங்கிய நிலையில் எந்தவித வேலைப்பாடுகளும் இன்றி காணப் படுகின்றன. முன் மண்டபத்தில் ஒரு நந்தியும், பலி பீடம் ஒன்றும் கருவறையை நோக்கியவாறு குளந்தை ஆண்டவரை வணங்கி நிற்பது போன்று காட்சி தருகின்றது.

துவாரபாலகர்கள்

அர்த்த மண்டபத்தின் வாயில்களில் இரண்டு துவாரபாலகர் சிற்பங்கள் 186 செ.மீ. உயரத்துடன் முறுக்கிய மீசையுடனும், கோரைப்பற்களுடனும் கம்பீரமாகக் காட்சியளிக் கின்றனர். பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் சிற்பங்கள் அமைந்துள்ளன. இச்சிற்பங்கள் கோயில் அமைக்கப்பட்ட காலத்திலேயே அமைக்கப்பட்டவையாகும். தெற்குப்புறமுள்ள துவாரபாலகர் வலது கரத்தால் தர்ஜினி முத்திரை காட்டி, இடக்கரத்தை கதையின் மீது ஊன்றி ஜடாமுடி தாங்கி விளங்குகிறார்.

மார்பில் உபவீதம், காதுகளில் பத்ர குண்டலம், கரண்ட மகுடம், தோள் வளை, இடைக்கச்சை, கால்களில் சிலம்புகள் அணி செய்கின்றன. வடக்குப்புறம் உள்ள துவாரபாலகர் இடது காலை நேராகவும், வலது காலை சிறிது மடக்கி வலது முழங்கையைக் கதை மீது வைத்து, இடது கரத்தை விஸ்மய முத்திரை காட்டி மிகவும் எழிலுடன் காட்டப்பட்டுள்ளார். மார்பில் உபவீதம், இடைக்கச்சை, கால்களில் சிலம்புகள் ஆகியவை அணி செய்கின்றன.

அர்த்தமண்டபம், முன்மண்டபம், இடைநாழிப் பகுதியில் தெற்குப் பக்கம் விநாயகரும், வடபுறம் ரிசப நாதர் சிற்பங்களும் அர்த்த மண்டபத்தின் வாயிலை அழகு செய்கின்றன. அர்த்த மண்டபத்தில் நான்கு உருளை வடிவத் தூண்கள் வேலைப்பாடு இன்றி விமானத்தைத் தாங்கி நிற்கின்றன.

இதனையடுத்து மேல் பட்டிகைகளில் பூத வரிகள் காணப்படுகின்றன. கருவறையில் சிவலிங்க வடிவில் கிழக்கு நோக்கிய தடாகபுரீசுவரர் காட்சி தருகிறார்.

சுயம்புலிங்க கோயில்

திருச்சுற்று மாளிகையின் வடபுறம் தெற்கு நோக்கி அகன்ற வாயிலை உடைய கோயில் அமைப்பு ஒன்று உள்ளது. அதன் வாயிலின் கீழ்ப்புறமுள்ள கல்வெட்டு "*ஸ்வஸ்திஸ்ரீ* அப்பரசர் ரங்கனார் ஸ்ரீஉத் பிரதான வற்றிப்பர் தம்மம்" என்று 15-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளது. இக்கோயிலில் தற்பொழுது லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டு காணப்படுகிறது.

மகாமண்டபம்

கோயிலின் வாயிலில் உள்ள மகாமண்டபத்தை அழகு செய்யும் கோபுரத்தின் மூன்று மேல் தளங்கள் செங்கற்

களாலும், அடித்தளம் கருங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளன. இதன் வாயிற்படிகளில் "சதா சேர்வை" என்று குறிப்பிடுகின்ற தமிழ், தெலுங்குக் கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

காஞ்சி பெருமாள் முதலி பிரமாந்தை சீயப்பன் திருச்சோலை ஒன்று இங்குள்ளது. இதனையடுத்து மகா மண்டபத்தின் உத்திரங்கள் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கும் அளவிற்கு சிற்பங்களுடன் காட்சி தருகின்றன. மகா மண்டபத்தின் தூண்கள் நாக பந்தம் உடையனவாகவும், நாக பந்தம் வரும் இடங்களில் சங்கு ஊதும் குள்ளபூதங்கள் அமைக்கப்பட்டு, தூண்களில் வெட்டு முனையுடன் கூடிய போதிகை அமைப்புகள் காணப்படுகின்றன.

சில தூண்கள் பிற்காலத்தில் உயரம் குறைவாக இருந்ததன் காரணமாக பீடங்கள் இணைத்து உயர்த்தப் பட்டுள்ளன. நல்ல தூண்களின் மேல் உத்திர அமைப்பைக் காணும்போது ஆடையின்றி பெண்கள் தாங்களே பல்லக்காக வளைந்து பின்னி ஒரு முனிவரை ஏற்றிச் செல்வது போலவும், முன்பின் நாட்டியமாடுவது போன்றும் பெண் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத் தொகுதி இராமாயணத்தில் நடக்கும் புத்திர காமேஷ்டி யாகத்தைக் குறிக்கும் வகையில் இராமாயணத்தில் வரும் கலைக்கோட்டு முனிவர் அயோத்திக்கு வருகை தரும் காட்சியாக இருக்கக்கூடும். மகாமண்டபத்தின் வாயில்களில் சுதையால் செய்யப்பட்ட துவார பாலகர்கள் சிற்பங்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் ஒரு சில பகுதி சிதைந்து காணப்பட்டாலும் மிகவும் அழகுடன் பிரகாசிக்கின்றது.

தேவரடியார் எடுத்த திருமண்டபம்

இத்திருமண்டபம் 'கல்யாண மண்டபம்' என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் தேவ காரியங்களைக்

கவனிக்கவும், இறைவன் திருமுன் நடனமாடவும் தேவர் அடியார்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் இக்கோயிலின் முன் உள்ள மிகவும் அழகு பொருந்திய மண்டபத்தைத் தம் சொந்த பொறுப்பில் கி.பி. 1350-இல் கட்டிக் கொடுத்துள்ளார் என்பதைக் கல்யாண மண்டபத்து மேற்குச் சுவரில் உள்ள கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

அக்கல்வெட்டு வாசகம் பின் வருமாறு

"***ஸ்வஸ்திஸ்ரீ*** சகலலோக சக்கரவர்த்திகள் இராசநாராயண சம்புவராயர்க்கு யாண்டு 12-ஆவது உடையார் குளந்தை ஆண்டார் கோயில் தேவரடியாரில் சம்பர் மகள் அமராபதி காத்தார் மகள் காதலியார் பண்ணுவித்த திருமண்டபம்"

இக்கல்யாண மண்டபம் இரண்டாம் திருச்சுற்றில் கிழக்கு பக்க மதில் சுவரை ஒட்டி வடக்கிலிருந்து தெற்குப் பக்கமாக அமைந்துள்ளது. நீளம் 30 மீட்டர், அகலம் 10.50 மீட்டர் என்ற அளவுடனும், மூன்று திசைகளிலும் படிக்கட்டுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. படிக்கட்டுகளின் ஓரப்பகுதிகள் யானையின் துதிக்கை வளைந்திருப்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இக்கல்யாண மண்டபத்திலுள்ள 51 தூண்கள் விதானத்தைத் (கூரையின் மேல் பகுதி) தாங்கி உள்ளன. ஒவ்வொரு தூண்களிலும் இயற்கைக் காட்சிகளைச் சித்தரிக்கும் அழகான சிற்பங்கள் அணி செய்கின்றன.

திருமண மண்டபச் சிற்பங்கள்

திருமண மண்டபம் கிழக்கிலிருந்து மேற்காக அமைந்துள்ளது. திருமண மண்டபத் தூண்களில் உள்ள சிற்பங்களைப் பற்றிய செய்திகள் பின்வருமாறு:

முதலாவது தூணில் நான்கு பக்கமும் நாட்டிய மகளிர் உள்ளனர். அவர்களைச் சுற்றிக் கொடிகள் வளைந்துக் காணப்படுகின்றன. அடுத்து ரிஷபநாதரின் சிற்பம் உள்ளது. அடுத்தப்பக்கத்தில் சிவனின் வடிவங்களில் ஒன்றான கஜசம்காரமூர்த்தி உக்கிரத்துடன் வடிக்கப்பட்டுள்ளார். அடுத்தப்பக்கத்தில் விநாயகர் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். அவரைச் சுற்றிக் கொடிகள் வளைந்துக் காணப்படுகின்றன.

இரண்டாவது தூணில் அடியவர் சிற்பமும், மறுபுறம் இருவர் மல்யுத்த சண்டை செய்யும் காட்சியும், ஒருவர் கத்தியை ஓங்கிக் குத்துவது மாதிரியானச் சிற்பமும் அமைக்கப் பட்டுள்ளன.

மூன்றாவது தூணில் மரத்தில் கண்ணன், கன்னிப் பெண்கள் குளிக்கும் காட்சியை ரசிப்பது போன்றும், சேலையைத் திருடிச் செல்லும் காட்சியும் மிக அழகானச் சிற்பங்களாக அமைந்துள்ளன. அடுத்து ரிஷபத்தின் மீது சிவன் உமையம்மை அமர்ந்த காட்சியும், இரண்டு குள்ள பூதம் போன்ற அடியவர்களின் சிற்பங்களும், மறுபக்கம் விநாயகர் அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றதும் காணப்படுகின்றன.

நான்காவது தூணில் இரண்டு பெண்கள் ஆடிய நிலையிலும், மறுபக்கம் சூரியனார் சிற்பம் நின்ற நிலையிலும் உள்ளது. அடுத்து கொடிப் பெண்கள் ஒரு கையால் கொடியைப் பிடித்தும், மற்றொரு கையால் இடையில் உள்ள கச்சையைப் பிடித்தும், ஒரு காலை மடித்து ஆடும் நிலையிலும் காணப்படுகின்றது. மயில்மீது முருகன் அமர்ந்து செல்லும் காட்சி சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது தூணில் ஒருபக்கம் நரசிம்மர் சிற்பமும், மறுபக்கம் பெண்ணின் சிற்பம் மார்பில் கச்சையில்லாமல் வெற்று உடம்புடனும் காணப்படுகின்றது.

ஆறாவது தூணில் மானின் சிற்பமும், மறுபக்கம் பாம்புக்கு பால் வார்ப்பவர் சிற்பமும், அவருக்குக் குடை பிடித்தபடி இன்னொருவர் சிற்பமும் மிக அழகாக அமைந்துள்ளது.

ஏழாவது தூணில் முனிவர்களின் சிற்பத் தொகுதி மற்றும் கொடிப் பெண்கள் சிற்பம் காட்சியாக வடிக்கப்பட்டுள்ளது.

எட்டாவது தூணில் இரண்டு பக்கம் கொடிப் பெண்களின் சிற்பமும், மறுபக்கம் கர்ப்பிணி பெண் ஒருவர்க்கு குழந்தை பிறக்கும் காட்சியும், இரண்டு பெண்கள் கர்ப்பிணியைப் பிடித்திருப்பது போன்றும், மற்றவர்கள் வேண்டிய உதவிகள் செய்வது போன்றும் மிக அழகாக காட்சி தருகின்றன.

ஒன்பதாவது தூணில் நடன மனிதர்கள் சிற்பமும், மறுபக்கம் சண்டை செய்யும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளன.

பதிமூன்றாவது தூணில் குள்ள பூதம் குழல் ஊதும் காட்சி மற்றும் பெண்கள் தண்ணீர் எடுத்துச் செல்லும் காட்சி காணப்படுகின்றன.

பதினான்காவது தூணில் பிட்சாடனார் பக்கத்தில் மான் நின்ற நிலையிலும், பூதகணம் உட்கார்ந்த நிலையிலும், மூன்று தாருகாவன ரிஷி பத்தினிகள் கைகோர்த்த நிலையிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பதினெட்டாவது தூணில் பூதங்கள் குழல் ஊதி நடனமாடும் காட்சியும், மற்றொரு பூதம் வாழைக் குலையைச் சுமந்து செல்வது போன்ற காட்சியும் உள்ளது.

இருபத்திரண்டாவது தூணில் இரண்டு மங்கையர் நடனமாடும் காட்சி காணப்படுகிறது.

இருபத்துமூன்றாவது தூணில் யானையை அடக்கும் காட்சி மிக அழகான சிற்பம் ஆகும். பக்கத்தில் மூன்று மனிதர்களும், ஒருவர் யானையை அடித்து தள்ளுவது போன்ற காட்சியும் உள்ளது.

இருபத்தேழாவது தூணில் அடியவர் அமர்ந்த நிலையில் காட்சி தருகிறார்.

இருபத்தெட்டாவது தூணில் பெண்ணின் உருவம் உள்ளது.

இருபத்தொன்பதாவது தூணில் பெண்ணின் நடனக் காட்சியை சித்தரிக்கும் சிற்பம் காணப்படுகிறது.

முப்பத்தொன்றாவது தூணில் முனிவர் அமர்ந்த நிலையில் உள்ள சிற்பம் காணப்படுகிறது.

முப்பத்திரண்டாவது தூணில் பூதம் கன்னத்தில் கை வைத்து சோகமாக அமர்ந்திருக்கும் காட்சி அமைந்துள்ளது.

முப்பத்துமூன்றாவது தூணில் பெண்ணின் சிற்பம் மட்டும் காணப்படுகின்றது.

முப்பத்தேழாவது தூணில் விநாயகர் பக்கத்தில் முனிவர் சிற்பமும், அதனையொட்டி பெண்ணின் சிற்பமும், விநாயகரின் துதிக்கை பெண்ணைத் தொடுவது போன்றும் அமைந்துள்ளது.

முப்பத்தெட்டாவது தூணில் மயில் மீது முருகன் செல்லும் காட்சியும், மயில் அலகில் பாம்பைத் தூக்கிச் செல்வது போன்ற காட்சியும் காணப்படுகின்றன.

நாற்பத்திரண்டாவது தூணில் இரு மனிதர்கள் வித்தை காட்டுவது போன்ற சிற்பங்களும், ஒருவர் காலை ஒருவர் தொடுவது போன்ற சிற்பங்களும் காணப்படுகின்றன.

நாற்பத்தைந்தாவது தூணில் ஒரு பெண் தலையை விரித்து முழங்காலிட்டு உட்கார்ந்த நிலையிலும், மறுபக்கம் கொடிப்பெண்கள் சிற்பமும் காணப்படுகின்றன.

நாற்பத்தாறாவது தூணில் குதிரை மீது பெண் அமர்ந்து செல்லும் காட்சியும், எதிரில் ஒரு அடியவர் சிற்பமும், ராமர், லட்சுமணன், அனுமான் அருகில் சீதை நின்ற நிலையிலும் காட்சியளிக்கின்றனர்.

நாற்பத்தேழாவது தூணில் இரண்டு மனிதர்கள் கத்தியை வைத்து அதன் மீது படுத்திருப்பது போன்ற காட்சி சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது.

நாற்பத்தெட்டாவது தூணில் வாயிற் காவலர்கள் நின்ற நிலையில் உள்ள சிற்பமும், இரண்டு பெண்கள் ஆடைகளின்றி வளைந்து நிற்கும் காட்சியும் அமைந்துள்ளது.

நாற்பத்தொன்பதாவது தூணில் கொடிப் பெண்கள் நடனமாடும் காட்சியும், கொடிப் பின்னலில் இரண்டு பெண் சிற்பங்களும் உள்ளன.

ஐம்பதாவது தூணில் ரிசப வாகனத்தில் சிவன், பார்வதி அமர்ந்த நிலையில் காட்சி தருகின்றனர். அங்கதன் குரங்கு உருவில் குடை பிடிக்க, அனுமான் வணங்கிய நிலையில் காணப்படுகிறார். அதனருகில் எழிலார்ந்த நடனமாடும் பெண்களின் நடனக் காட்சி சிற்பங்கள் உள்ளன.

ஐம்பத்தொன்றாவது தூணில் வாயிற் காவலர்கள் சிற்பங்கள் மிக அழகாக உள்ளன.

இவ்வாறாக திருமண மண்டபத்தின் தூண்களில் உள்ள சிற்பங்கள் மண்டபத்திற்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

நந்தி மண்டபம்

கோயிலின் இரண்டாவது திருச்சுற்றின் கிழக்குப் பக்கம் திருமண மண்டபத்தை ஒட்டி இறைவன் கருவறையை நோக்கி நந்தி மண்டபம் அமைந்துள்ளது. நந்தி மண்டபத்திற்கு முன் பலிபீடம், கொடி பீடம் ஆகிய இரண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

நந்தி மண்டபம் ஒரு சிறிய விமான அமைப்புடன் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. நந்தி சிற்பம் மிகவும் அழகு வாய்ந்ததாகக் காணப்படுகிறது. அமர்ந்த நிலையில் குறுகிய கொம்புகளும், நெற்றியில் காணப்படும் நெற்றிப்பட்டமும், கழுத்தில் தவழும் மணிச் சரங்களும், முதுகில் அணிந்திருக்கும் பட்டுப் பீதாம்பரமும் அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது.

சம்பந்தர் கோயில்

இரண்டாம் திருச்சுற்றின் தெற்குப் பக்கத்தில் கருவறை முன்மண்டபத்துடன் கூடிய சந்நிதி இறை உருவமின்றிக் காணப்படுகிறது. முன் மண்டபம் நான்கு தூண்களை உள்ளடக்கிக் காணப்படுகிறது. இக்கோயில் சம்பந்தருக்கு எடுக்கப்பட்ட கோயிலாக இருக்கலாம் எனக் கல்வெட்டுச் செய்திகளின் மூலம் அறியப்படுகிறது. தற்சமயம் இக்கோயில் சிதைந்து காணப்படுகின்றது.

பெரிய நாயகி அம்மன் கோயில்

அம்மன் கோயில் விமானம் அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற நிலைகளில் காணப்படுகின்றது. தடாக புரீசுவரர் கோயில் எடுக்கப்பட்ட காலத்திலேயே இக்கோயில்

எடுக்கப்பட்டிருக்க வேண்டும். கீழ்ப்பகுதி கற்களாலும், மேல்பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. விமானம் ஒரு தள வேசர விமானமாகும்.

கோயில் அதிட்டானப்பகுதி பத்மம், ஜகதி, குமுதம் ஆகியவைகளுடன் காணப்படுகிறது. சுவர்ப்பகுதி பல கால்வரிகளையும், தேவகோட்டங்களையும் பெற்று அமைந்துள்ளது. பிரஸ்தரப்பகுதி, பூதவரி, கபோதம் ஆகியவைகளுடன் காணப்படுகிறது.

கருவறையில் தற்சமயம் எந்த விதமான சிற்பங்களும் காணப்படவில்லை. இங்கிருந்த அம்மன் சிலையை எடுத்து கோயில் முன் மண்டபத்தில் வைத்து வழிபடுகின்றனர். கல்வெட்டில் அம்மனுக்குக் கோயில் எடுத்தச் செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

இரண்டாம் திருச்சுற்று உயர்ந்த மதில்களை உள்ளடக்கிய உயர்ந்த கோட்டைச் சுவர்களைப் போன்று காட்சியளிக்கின்றது. பரந்த நிலப்பரப்புகளுடன் இது காணப்படுகின்றது. இரண்டாம் திருச்சுற்றில் திருமண மண்டபத்தின் அருகிலும் சிதைந்த சில மண்டபங்கள் காணப்படுகின்றன. அவற்றில் உள்ள தூண்களில் கலை நுணுக்கத்துடன் கூடிய புடைப்புச் சிற்பங்கள் அமைந்துள்ளன. மேலும் மடப்பள்ளி இரண்டு அறைகளைக் கொண்டு சிதைந்து பயன்பாடின்றிக் காணப்படுகிறது.

கோபுரம்

விசயநகர மன்னரால் வெற்றிச் சின்னமாக எடுக்கப்பட்ட இக்கோபுரம் தெற்கில் அமைந்துள்ளது. திருக்கோபுரத்தின் வெளிநிலைக் காலில் கொடிப்பெண்களும், கொடி

வட்டங்களுக்கிடையே விநாயகர், முருகன், திருமகள், நரசிம்மர், கண்ணன், வியாக்கிரபாத முனிவர், லிங்கம், பசு, நாகம் ஆகிய உருவங்களும் காணப்படுகின்றன.

கோபுரம் ஐந்து மேல் தளங்களுடனும், 18 மீட்டர் உயரத்துடனும் உள்ளது. கோபுரத்தின் கீழ்த்தளம் கருங்கற்களாலும் மேல்தளம் செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. மேல் தளங்களில் மர உத்திரங்களைப் பிரித்து எடுத்ததால் கோபுரம் உள் கூடாகக் காணப்படுகின்றது. கோபுரத்தின் உள் கீழ்ப்புறம் ரிஷபம், சூலம், சந்திரன் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இக்கோபுரத்தினை முழுவதுமாக புனரமைத்து நல்ல நிலையில் பராமரித்து வருகிறது.

கோபுரத்தில் இரண்டு, மூன்று இடங்களில் ரிஷபம் மற்றும் சந்திரனின் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளன. கோபுரத்தில் அதிட்டானம் அமைப்பு ஏதுமில்லை. பட்டிகை, கண்டம் மட்டும் காணப்படுகின்றது. இங்குள்ள கல்வெட்டின் ஒரு பக்கம் ரிஷபம், கட்டாரி உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதேபோல் கல்வெட்டின் மேல்பகுதியிலும் ரிஷபம், கட்டாரி உருவங்கள் உள்ளன. கல்வெட்டின் மேல்பகுதியில் இரு அடியவர்கள் கோயிலை வணங்குவது போன்று காட்சியளிக்கிறார்கள். இவர்களில் ஒருவர், இக்கோபுரத்தை எடுத்த கண்டார கூளிமாற நாயக்கன் உருவமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவனது கல்வெட்டு எழுத்துக்களை விட "தூணாண்டார் ஆற்றூழார்" கல்வெட்டு சற்று பிற்காலத்தியவையாக இருப்பதால், கண்டார கூளிமாற நாயக்கன் எடுத்த கோபுரத்தை இவர் திருப்பணி செய்திருக்கலாம் எனத் தெரியவருகிறது.

இரதப் பட்டறை

இராஜ கோபுரத்திற்கு மேற்கு பக்கம் இரதப் பட்டறை ஒரு சிறிய கருவறை மற்றும் முன்மண்டபத்தோடு அமைந்துள்ளது. கருவறையை உள்ளடக்கி இரண்டு தூண்களும், மண்டபத்து சுவர்ப் பகுதியை உள்ளடக்கி இரு தூண்களும், வாயில் பகுதியில் இரு தூண்களுமாக மொத்தம் ஆறு தூண்களைக் கொண்டு இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு தூண்களிலும் கலைநுணுக்கம் செறிந்த சிற்பங்கள் காட்சி தருகின்றன. மேலும் கருவறையில் ஒரு பெரிய விநாயகர் சிற்பம் உள்ளது. நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் முன்னிரு கரங்களில் தந்தம், மோதகம், பின்னிரு கரங்களில் பாசம், அங்குசம் ஏந்தி, தலையில் கிரீட மகுடத்துடன் காட்சியளிக்கின்றார். மண்டபத்தில் இரதம் இழுக்கும் வண்டி ஒன்று உள்ளது. இது நான்கு சக்கரங்களைக் கொண்ட மர வண்டியாகும்.

இரதப் பட்டறைச் சிற்பங்கள்

1. அமர்ந்த நிலையில் உள்ள முனிவரின் கீழ் ஒரு லிங்கமும், மறுபக்கம் ரிஷபம் அமர்ந்த நிலையிலும், அதற்கும் சற்று மேல் முனிவர் கையைத் தூக்கி ஒரு கையை ஊன்றிய நிலையிலும் சிற்பங்கள் உள்ளன. அடுத்து தேவி நின்ற நிலையிலும் அவள் தலையைச் சுற்றி தீ சுவாலையும் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் கச்சை இல்லாத மார்புடன் காணப்படுகின்றது.

2. நரசிம்மர் நின்ற நிலையிலும், அவருக்குக் கீழ் யோக பட்டம் கட்டிய முனிவர் உட்கார்ந்த நிலையிலும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

3. பூதம் மகுடி ஊதுவது போன்ற சிற்பம் உள்ளது.

சற்று மேல் ஒரு பெண் ஒரு காலை ஊன்றியும், ஒரு காலை முழங்காலிட்டும், தனது இரு கைகளிலும் கத்தியை ஏந்தியும், தனது கரங்களால் கத்தியை நிற்க வைத்தும், கத்தியின் கூர் முனையில் ஒரு முனிவர் தவம் செய்யும் காட்சி போன்றும் மிக அழகாக சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன.

இரண்டு நடன மாதர்களின் கால்கள் வளைந்து இருவரையும் தொடுவது போன்ற சிற்பமும், கன்னத்தில் கை வைத்து யோக பட்டம் கட்டிய நிலையில் ஆண் உருவமும் காணப்படுகின்றது.

4. ஒரு குரங்கு நடந்து செல்வது மாதிரியும், அதன் முதுகுப் பகுதியில் மேலாக காலை தூக்கிய வாலுடன் கூடிய உருவமும், சற்றுக்கீழ் வால் பகுதிக்கு மேல் குரங்கு உடல் தாங்கிய இரண்டு கைகளை மேலே தூக்கியவாறு ஒரு உருவமும் வித்தியாசமாகக் காட்டப்பட்டுள்ளது. முனிவர் தவம் செய்யும் காட்சியும், ஆடையில்லாத ஒரு பெண்ணின் சிற்பமும் காணப்படுகிறது. இவ்விதம் இரதப் பட்டரை அழகிய சிற்பங்களுடன் காட்சி தருகின்றது.

செப்புத் திருமேனிகள்

விநாயகர்

விநாயகரின் செப்புத்திருமேனி 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதன் உயரம் 49 செ.மீ., சுற்றளவு 27 செ.மீ. ஆகும். விநாயகர் நான்கு கரங்களைக் கொண்டு விளங்குகிறார். முன்னிரு கரங்களில் தந்தமும், மோதகமும், பின்னிரு கரங்களில் பாசம் மற்றும் அங்குசம் கொண்டு நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். கரண்ட மகுடம் தரித்து, இடுப்பில் பாம்பு சுற்றப்பட்டு காணப்படுகிறார். கழுத்தில் மணி ஆரம் அணிந்து காட்சி தருகிறார். இச்செப்புத்திருமேனி பாலகணபதி வகையைச் சார்ந்ததாகும்.

பாலசுப்ரமணியர்

பாலசுப்ரமணியருடைய திருமேனி 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இத்திருமேனியின் உயரம் 47 செ.மீ., அகலம் 18.5 செ.மீ. ஆகும். பாலசுப்ரமணியர் தலையில் கரண்ட மகுடமும், காதில் பத்ர குண்டலமும், இடையில் மணி சரங்களுடனும், கணுக்கால் வரை பீதாம்பரமும், இடுப்பில் மாலைச் சுற்றியும் காணப்படுகிறார். இவர் பத்மபீடத்தில் நின்ற நிலையில் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கின்றார். பின்னிரு கரங்களில் வச்சிராயுதம், கத்தியுடனும், முன்னிரு கரங்களில் அபய, வரத முத்திரைகளுடனும் காட்சியளிக்கிறார்.

சந்திரசேகரர்

சந்திரசேகரர் தலையில் கிரீட மகுடம் தரித்துள்ளார். காதுகளில் பத்ர குண்டலமும், நான்கு கரங்களில் முன்னிரு

கரங்களில் அபயம், வரத முத்திரைகளுடனும், பின்னிரு கரங்களில் மான், மழு கொண்டும் விளங்குகிறார். கணுக்கால் வரையிலான ஆடை அணிந்து, இடையில் கட்டப்பட்ட கச்சையின் கட்டு தொங்கவிடப்பட்டுள்ள இத்திருமேனி 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

சந்திரசேகரர் - அம்மன்

சந்திரசேகரர்-அம்மன் 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 44.5 செ.மீ., அகலம் 17 செ.மீ. ஆகும். தலையில் கிரீட மகுடமும், காதுகளில் மகர குண்டலமும் அலங்கரிக்கின்றன. இவர் இரண்டு கரங்களைக் கொண்டு விளங்குகிறார். கழுத்தில் மாங்கல்யம் அணிந்துக் காணப்படுகிறார். கண்டமாலை அணிந்திருக்கிறார். கையில் பூரிமம் காப்பு அணிந்துள்ளார். கணுக்கால் வரை சேலை தொங்கிய நிலையில், மார்பில் கச்சையின்றி உள்ளார். மார்பில் வீரசன்னம் அணிந்து காணப்படுகிறார். பத்மபீடத்தில் நின்ற நிலையில் சமபங்கத்தில் கண் மூடிய நிலையில் காட்சியளிக்கின்றார்.

பள்ளியறை நாயகர்

பள்ளியறை நாயகரின் காலம் 17,18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 26 செ.மீ., அகலம் 14 செ.மீ. ஆகும். இவர் பத்மபீடத்தில் சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் காட்சியளிக்கின்றார். நான்கு கரங்களுடன், முன்னிரு கரங்களில் அபய, வரத முத்திரையுடனும், பின்னிரு கரங்கள் மான், மழு கொண்டும் விளங்குகிறார். கைகளில் காப்பு, காதுகளில் பத்ரகுண்டலம், மார்பில் முப்புரிநூல், தலையில் கீரிடமகுடம் அணிசெய்கின்றன. தலையில் அணிந்திருக்கும் மகுடத்தில் மணிச்சரல்கள் தொங்கிய நிலையில் மகுடத்தின் பின்புறம் வட்ட வடிவமான மகா அலங்காரம் செய்யப் பட்டுள்ளது. இடுப்பில் மணிச்சரல்களும், கால்களில் காப்பும் அழகூட்டுகின்றன.

பள்ளியறை அம்மன்

பள்ளியறை அம்மனின் காலம் 17, 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 28 செ.மீ., அகலம் 11 செ.மீ. ஆகும். பள்ளியறை அம்மன் திரிபங்கத்தில் நின்ற நிலையில், தலையில் கரண்ட மகுடம் அணிந்து காணப்படுகின்றார். இவர் காதுகளில் பத்ர குண்டலம், மகர குண்டலத்துடனும், கைக்காப்பு, கேயூரம், கடக வளையுடனும், கழுத்தில் கண்ட மாலை, இடுப்பில் மணிச்சரங்கள் அணி செய்கின்றன.

வீரபத்ரர்

வீரபத்ரரின் செப்புத்திருமேனி 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 59.5 செ.மீ., அகலம் 39 செ.மீ. ஆகும். தலையில் கிரீட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலமும், காணப்படுகின்றன. இவரின் நான்கு கரங்களில், முன்னிரு கரங்கள் வீரவாள் ஏந்தியும், பின்னிரு கரங்களில் வேல், பாசம் கொண்டும் காட்சித் தருகிறார். கழுத்தில் மணி ஆரமும், மார்பில் முப்புரிநூல் அணிந்தும் காணப்படுகிறார். அவர் கட்டியுள்ள பீதாம்பரம் அழகிய வேலைப்பாடுகளுடன் திகழ்கிறது. இவர் நின்ற நிலையில் பத்மபீடத்தில் ஒளி வட்டத்துடன் காட்சி தருகிறார்.

காளியம்மன்

காளியம்மனின் திருமேனி 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்து காணப்படுகிறது. இத்திருமேனி 35 செ.மீ. உயரமும் 13 செ.மீ. அகலமும் கொண்டு விளங்குகிறது. காளியம்மன் பத்ம பீடத்தின்மீது திரிபங்கத்தில் நின்ற நிலையில் காட்சி அளிக்கிறார். இடையில் கட்டிய சேலை கணுக்கால் வரை நீண்டு உள்ளது. மார்பில் கச்சை அணிந்துக் காணப்படுகிறார்.

ரிஷபவாகன மூர்த்தி

ரிஷபத்தின் மீது சாய்ந்து நின்ற நிலையில் காதுகளில் மகரம், பத்ர குண்டலம் அணிந்தும், நான்கு கரங்களுடனும் ரிஷபவாகன மூர்த்தி காட்சியளிக்கின்றார். பின்னிரு கரங்கள் மழு, மான் கொண்டும், முன்னிரு கரங்கள் ரிஷபத்தின் மீதும், ஊரு ஹஸ்தம் கொண்டும் விளங்குகின்றன. தலையில் கிரீட மகுடம், இடைக்கச்சை, கழுத்தில் அணிகலன்கள் மெருகூட்டுகின்றன. தலைக்கு மேல் சிம்மம் அலங்கரிக்கிறது.

நந்தி வாகனம்

இத்திருமேனியின் உயரம் 51 செ.மீ. மற்றும் 75 செ.மீ. நீளம் ஆகும். ஒரு காலைத் தூக்கி மற்ற கால்களை மடக்கி அமர்ந்த நிலையில் தலையைத் தூக்கிப் பார்ப்பது போன்று மிடுக்குடன் நந்தி காணப்படுகின்றது. சிறிய கூர்மையான கொம்புகளைக் கொண்டும், அழகான வண்ண அலங்கார துணி முதுகில் அணிந்தும், கழுத்தில் மணிச்சரல்கள் கட்டப்பட்டும், கால்களில் மணி ஆரங்களுடனும், கொம்புகளைச் சுற்றிப் பட்டிகை அணிந்து அலங்காரத்துடன் காட்சியளிக்கிறது.

திருவிழாக்களும் வழிபாடுகளும்

திருவிழா இந்த மண்ணில் கற்பிக்கப்பட்ட ஒரு கலாச்சாரம். வாழையடி வாழையாய் வந்த வழக்கம். மக்கள் வாழ்வின் ஒரு பகுதி. மக்களின் பணத்தையும், மனத்தையும் தீர்மானிக்கும் நிறுவனங்களாய் கோயில்கள் நிலை கொண்டபோது மனிதனைத் திசை திருப்ப நடந்த ஏற்பாடுகள் திருவிழாக்கள் ஆகும்.

மனித வாழ்க்கை, கோயில் என்ற அச்சாணியை நம்பியே சுற்றத் தொடங்கிய காலக்கட்டத்தில் கலை அங்குதான் நிர்ணயமாயிற்று. கருத்து அங்குதான் வடிவமைக்கப்பட்டது. உறவுகள் அங்குதான் தீர்மானிக்கப்பட்டன.

மக்களின் மகிழ்ச்சி வெளிப்பாடே திருவிழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன. காலம் காலமாக கடைப்பிடித்து வரும் பழக்கம் தொடர்ந்து கொண்டே செல்கிறது. இன்று மக்கள் முன்னோர் பாதையில் திருவிழாக்களைக் கொண்டாடி வருகின்றனர்.

தெப்பத் திருவிழா

ஊர்ப்பொதுமக்கள் ஒவ்வொரு வருடமும் மாசி மகத்தன்று திருவிழா கொண்டாடுகின்றனர். கோயிலில் கொடியேற்று விழா நடத்தி அதன்பிறகு ஐந்து நாட்கள் தெப்பத் திருவிழா நடைபெறுகின்றது.

முதல் நாள் திருவிழா அன்று ஊர்ப்பொதுமக்கள் முன்னிலையில் இறைவன் சப்பரம் வாகனத்தில் மூன்று முறை தெப்பக்குளத்தில் வலம் வருவார். பின்னர் இறைவனைத் தெப்பத்தில் மிதக்க விடுவர்.

தெப்ப விழா இரவில் நிகழும். அதிகாலை நான்கு மணியிலிருந்து, ஐந்து மணியளவில் மீண்டும் இறைவன் கோயிலை வந்தடைவார். இரண்டாம் நாள் அன்று சப்பர வாகனத்தில் இறைவன் குளத்தினை ஐந்து முறை உலா வருவார்.

மூன்றாம் நாள் திருவிழாவின்போது ஏழு முறை இறைவன் தெப்பக்குளத்தில் வலம் எடுத்துச் செல்லப்படுகிறார்.

நான்காம் நாள் விழாவின்போது இறைவன் சப்பர வாகனத்தில் ஒன்பது முறை தெப்பக்குளத்தைச் சுற்றி வருகிறார்.

ஐந்தாம் நாள் விழாவின்போது இறைவன் 11 முறை சப்பர வாகனத்தில் தெப்பக்குளத்தைச் சுற்றி வருகிறார்.

நவராத்திரித் திருவிழா

ஆவணி அல்லது புரட்டாசி மாதம் எளிய முறையில் நவராத்திரித் திருவிழா கோயிலுக்குள் நடக்கும். சுவாமிக்கும், அம்மனுக்கும் தீபாராதனை மற்றும் அபிஷேகங்கள் நடைபெறும். இத்திருவிழா ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுகின்றது.

கார்த்திகைத் திருவிழா

கார்த்திகைத் திருவிழா மிகவும் எளிய முறையில் ஒரு நாள் நடைபெறும். இத்திருநாளன்று இறைவன் திருவீதி உலா

வருவார். அந்த நேரத்தில் எல்லா விதமான வழிபாடுகளும் நிகழ்கின்றன.

மார்கழித் திருவிழா

மார்கழித் திருவாதிரை நாளன்று 'ஆருத்ரா தரிசனம்' என்னும் திருவிழா நடைபெறுகிறது. இறைவன் திருவீதி உலா வந்து காட்சியளிக்கிறார். அன்று பல்வேறு வழிபாடுகள் செய்கின்றனர்.

பிற கோயில்கள்

மஸ்தான் ஆலயம்

மஸ்தான் ஆலயம் தெப்பக்குளம் அருகில் உள்ளது. கருவறை, முன்மண்டபம், பலிபீடம் என சிறிய கோயிலாக அமைந்துள்ளது. இக்கோயில் ஒரு நூற்றாண்டிற்குட்பட்டதாக இருக்கக்கூடும். இக்கோயில் கருவறையில் லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாட்டில் உள்ளது. கருவறையின் வாயிலில் விநாயகர் மற்றும் முருகனின் சிற்பங்கள் அமைந்துள்ளன.

முன்மண்டபத்தினுள் சிறிய நந்தி ஒன்று வைக்கப் பட்டுள்ளது. இதற்கருகில் லிங்கம் மற்றும் நவகிரகச் சிற்பங்களும் அமைந்துள்ளன.

பெயர்க் காரணம்

இங்கு முதலில் முனுசாமி சாமிகள் என்பவர் ஆசிரமம் நடத்தி நாள் ஒன்றுக்கு 25 துறவிகளுக்கு அன்னதானம் செய்து வந்துள்ளார். காஞ்சிபுரத்திலிருந்து, திருவண்ணாமலை செல்பவர்களுக்கு சற்று இளைப்பாறும் ஓய்விடமாக இந்த ஆசிரமம் விளங்கியது.

மஸ்தான் சுவாமிகள் சமயத்தால் இஸ்லாமியராகவும், இரமண மகரிஷியின் சீடராகவும் விளங்கினார். சிவத்தொண்டில் மிகவும் பற்று ஏற்பட்டு சிவ வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்தார். இவர் இவ்விடத்தில் தங்கி சிவனடியார்களுக்கு வேண்டிய

உதவிகளைச் செய்து வந்தார். இம்மகான் ஜீவசமாதி அடைந்த நாளான ஐப்பசி சித்திரை நட்சத்திரம் அன்றும், திரு நட்சத்திர குருபூஜை அன்றும் இங்கு அன்னதானம் செய்யப்படுகிறது. ஒரு காலத்தில் அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் இங்கு வந்து குருபூஜை செய்திருக்கலாம் என சிவனடியார்கள் கருதுகின்றனர்.

மஸ்தான் ஆலயத்தின் கருவறையினுள் மகான் மஸ்தான் பூத உடல் அடக்கம் செய்யப்பட்டு அதற்கு மேல் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது.

கன்னிக் கோயில்

மடம் கிராமத்திலிருந்து தேசூர் செல்லும் சாலையில் கன்னிக் கோயில் என்றழைக்கப்படுகின்ற ஒரு கோயில் காணப்படுகிறது. இங்கு கட்டடங்கள் ஏதுமின்றி, சுடுமண் பொம்மைகளை நிறுத்தி வைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இவ்வூர் மக்கள் நோய் நீங்கி உடல்நலத்துடன் வாழ்வதற்குப் பிரார்த்தனை செய்தும், குழந்தை வரம் வேண்டியும், ஆடு மாடுகளுக்கு நோய், நொடி வராமல் இருக்க வேண்டியும் சுடுமண் பொம்மைகள் செய்து ஆடி மாதத்தில் திருவிழா நடத்துகின்றனர். சுடுமண் பொம்மைகள் செய்து வைத்து வேண்டினால், வேண்டுதல்கள் நிறைவேறுவதாக மக்கள் நம்புகின்றனர்.

அசலாத்தம்மன்

இராஜாக் கல்லுக்கு நேர்க்கிழக்குப் பகுதியில் அசலாத்தம்மன் கோயில் அமைந்துள்ளது. கோயில் கருவறை மற்றும் முன்மண்டபம் ஆகிய அமைப்புடன் காணப்படுகிறது.

கருவறையில் சப்தமாதர்கள் எழுவர் சிற்பங்களும், இரண்டு பக்கமும் வீரபத்ரர் சிற்பங்களும் உள்ளன. இந்த சப்தமாதர் கோயிலைத்தான் அசலாத்தம்மன் என்றழைக்கின்றனர்.

காளியம்மன் கோயில்

தேசூர் நெடுஞ்சாலையில் ஊரையொட்டி காளியம்மன் கோயில் அமைந்துள்ளது. கருவறை, முன்மண்டபம் ஆகியவற்றுடன் அமைந்துள்ள இக்கோயிலின் எதிரில் பலிபீடம் ஒன்று அமைந்துள்ளது. கருவறையில் தேவி புலிமீது வீற்றிருந்து, நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் காட்சி அளிக்கிறாள். இக்கோயில் சமீபகாலத்தில் கட்டப் பட்டதாகும்.

விநாயகர் கோயில்

செங்குந்த முதலியார் தெருவில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் கருவறையை மட்டும் கொண்டு விளங்குகிறது. கருவறைக்கு மேல் சிறிய விமானம் அமைக்கப்பட்டுள்ளது.

விநாயகருக்கு நான்கு கரங்கள் உள்ளன. பின்னிரு கரங்களில் பாசம் மற்றும் அங்குசத்துடனும், முன்னிரு கரங்களில் தந்தம் மற்றும் மோதகத்தைக் கொண்டும் விளங்குகிறார். இக்கோயில் இன்றும் வழிபாட்டில் உள்ளது.

ஊர் நடுவில் உள்ள அம்மன் கோயில்

அம்மன் கோயில் ஊரின் நடுவில் உள்ள சாலையை ஒட்டி அமைந்துள்ளது. கருவறை, முன்மண்டபம், அர்த்தமண்டபம் என மூன்று பிரிவாக அமைந்துள்ளது.

கருவறையில் அம்மன் தலை மட்டும் கொண்ட சிற்பம் மிகவும் உக்கிரமாக நாக்கைத் தொங்கவிட்டுக் காட்சி

அளிக்கிறது. வேறு எந்தவிதமான சிற்பங்களும் இங்கு கிடையாது. இதுவும் வழிபாட்டில் உள்ள கோயிலாகும்.

ஊர் நடுவில் உள்ள விநாயகர் கோயில்

ஊரின் மத்தியில் செல்லும் சாலையில் சற்று மேற்கில் விநாயகர் கோயில் ஒன்று அமைந்துள்ளது. கருவறையை மட்டும் கொண்டு விளங்கும் இக்கோயிலில் விநாயகர் அமர்ந்த நிலையில் நான்கு கரங்களைக் கொண்டு விளங்குகிறார். முன்னிரு கரங்களில் தந்தமும், மோதகமும், பின்னிரு கரங்களில் பாசமும், அங்குசமும் கொண்டு விளங்குகிறார். இக்கோயில் இன்றும் வழிபாட்டில் உள்ளது.

சுடுகாட்டு அம்மன் கோயில்

ஊருக்கு மேற்கில் ½ கி.மீட்டர் தூரத்தில் ஒரு தேவியின் சிற்பம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டடம் ஏதும் கிடையாது. இந்த அம்மன் சிலை இருக்கும் இடம் சுடுகாட்டுப் பகுதியாகும். நான்கு கைகளுடன் முன்னிரு கரங்களில் அபய, வரத முத்திரைகளுடனும், பின்னிரு கரங்களில் உடுக்கை, அங்குசம் ஏந்தியும் காட்சியளிக்கிறார். தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும் அணிந்துக் காணப்படுகிறார். மார்புக் கச்சை கிடையாது. இடையில் பீதாம்பரம் அணிந்து காணப்படுகிறார். இந்த சிற்பம் 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

குளக்கரைச் சிவன் கோயில்

குளக்கரைக் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம் என மூன்று பகுதிகளாக விளங்குகிறது. கருவறையில் மட்டும் லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடற்றுக் காணப்படுகிறது.

இக்கோயிலை குளக்கரை தடாகபுரீசுவரர் என மக்கள் அழைக்கின்றனர். மேலும் முன்மண்டபத்தில் உள்ள தூண் களில் சில சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒரு தூணில் குரங்கு பழம் சாப்பிடுவது போலவும், ஒரு ஆண் மற்றும் மூன்று நடன மங்கையர்கள் ஆடையின்றி நடனமாடும் காட்சியும், நரசிம்மர் சிற்பமும், குழந்தையின் சிற்பமும் செதுக்கப் பட்டுள்ளன.

இக்கோயிலுக்கு எதிரே ஆலமரத்தடியில் உள்ள நாகர் சிற்பம் தற்போதும் வழிபாட்டில் உள்ளது.

கல்வெட்டு செய்திகள்

மடம் கிராமத்தில் 1918-1919 - ஆம் ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையால் 58 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு அவ்வாண்டு கல்வெட்டு அறிக்கையில் அவற்றின் ஆங்கிலச் சுருக்கங்கள் வெளியிடப் பட்டுள்ளன. இவ்வாய்வின்போது மேலும் இரு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளதால் மொத்தம் 60 கல்வெட்டுகள் இவ்வூரில் இடம் பெற்றுள்ளன.

இக்கல்வெட்டுகள் தடாகபுரீசுவரர் கோயிலின் கருவறையில் ஆறும், முன் மண்டபத்தில் பதினான்கும், மகா மண்டபத்தில் ஒன்றும், திருச்சுற்று மதிலில் பதினொன்றும், கோபுரத்தில் மூன்றும், கல்யாண மண்டபத்தில் இரண்டும், திருச்சுற்றில் உள்ள கோயிலில் ஒன்றும், கோயிலின் வெளியே துர்க்கை சிற்பத்துடன் உள்ள ராஜாக்கல் என்று வழங்கப்படும் பாறையில் பதினொன்றும், வயல்வெளியில் உள்ள சறுக்குப் பாறையில் ஒன்றும், வெங்காலம்மன், அண்ணாமலையான் குட்டைகளின் அருகே ஒவ்வொன்றுமாகக் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுகள் தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டவை. கிரந்தம் பொதுவாக எல்லாக் கல்வெட்டுகளிலும் சமஸ்கிருதச் சொற்களை எழுதப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் முற்றிலும் சமஸ்கிருத மொழியிலும், கிரந்த எழுத்திலுமாக அமைந்துள்ளது.

படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் வாசகங்கள் ஒன்றைத் தவிர வேறு எதுவும் இதுவரை இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையால் வெளியிடப்படவில்லை. ஒரு கல்வெட்டு பல்லவர் கல்வெட்டுத் தொகுதி SII. Vol XII-இல் வெளிவந்துள்ளது. சம்புவராயர் வரலாறு குறித்து நூல் எழுதிய முனைவர் கோ. தங்கவேலு, திரு இல. தியாகராஜன் ஆகியோர் ஆறு கல்வெட்டுகளின் வாசகங்களை வெளியிட்டுள்ளனர். விசயநகரர் குறித்து ஆய்வு செய்த முனைவர் ப. சண்முகம் அவர்கள் தாம் சேகரித்து வைத்திருந்த 15 கல்வெட்டுகளின் வாசகங்களைத் தந்து உதவினார். அவை தவிர ஒன்பது கல்வெட்டுகள் ஆய்வின்போது இந்நூல் ஆசிரியரால் நேரில் படிக்கப்பட்டு வாசகங்கள் எழுதப்பட்டன. ஆக 60 கல்வெட்டுகளில் 30 கல்வெட்டுகளின் முழு வாசகங்கள் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரசர்கள்

விசயகம்ப விக்கிரமன் (869-901)

தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி செய்த முற்காலப் பல்லவர்களின் ஆட்சியின் இறுதிப்பகுதியில் ஆட்சி செய்த அரசன் விசயகம்ப விக்ரமன் ஆவான். மூன்றாம் நந்திவர்மனின் இருவேறு மனைவியர்களுக்கு கம்பவர்மனும் நிருபதுங்கனும் பிள்ளைகளாகப் பிறந்தனர். முதலில் இளையவனான நிருபதுங்கன் ஆட்சி செய்ய அவனுடன் போரிட்டு ஆட்சியைக் கைப்பற்றி கம்பவர்மன் ஆட்சி செய்தான். இவனது மகன் அபராசிதன் ஆவான்.

கம்பவர்மனின் கல்வெட்டுகள் பல தமிழகத்தில் கிடைத்துள்ளன. இவனுக்கு கங்க இளவரசி விசயா மணம் முடிக்கப்பட்டு அவளுக்குப் பிறந்தவளே அபராசிதன் ஆவான்.

அபராசிதவர்மனின் வேலஞ்சேரி மற்றும் திருத்தணிச் செப்பேடுகள் அவனது தந்தையான கம்பவர்மனைப் பற்றி புகழ்ந்து பல செய்திகளைத் தருகின்றன.

இம்மன்னனின் கல்வெட்டு (283/1918-19) இவ்வூர் சறுக்குப் பாறையில் உள்ளது. இக்கல்வெட்டு ஏரிப்பட்டி என்ற நீர்நிலையைப் பாதுகாப்பதற்காக நிலம் வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

முதலாம் குலோத்துங்க சோழன் (1070-1120)

'சுங்கந்தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்' என்று கல்வெட்டில் புகழப்பெற்றுள்ள இவ்வேந்தன் கீழை சாளுக்கிய மன்னனான இராசராச நரேந்திரனுக்கும் முதலாம் இராசேந்திரனின் மகளான அம்மங்கைதேவிக்கும் மகனாவார். இவனுடைய இயற்பெயர் இராசேந்திரன். இவன் கி.பி. 1070-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் ஒன்பதாம் நாளில் சோழப் பேரரசின் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் முடிசூட்டிக் கொண்டான்.

இவனது இராச்சியம் வடக்கே மகாநதி முதல் தெற்கே குமரிமுனை வரை பரவியிருந்தது. ஈழ மண்டலமும் சோழப் பேரரசின் கீழிருந்தது.

இவனுடைய கல்வெட்டுகள் மடத்தில் 14 உள்ளன. இவை முறையே 5, 7, 11, 26, 38, 41, 43, 44, 46, 49, 50 ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்தவை.

விக்கிரம சோழன் (1118-1136)

இளமைப் பருவத்தில் வேங்கி நாட்டில் அரசப் பிரதிநிதி யாயிருந்து அதனை ஆட்சி புரிந்தவன். கி.பி. 1118-இல் சோழ

நாட்டில் இளவரசுப் பட்டம் கட்டப்பெற்று தன் தந்தைக்கு உதவி புரிந்து வந்தான். 1120-இல் விக்கிரமசோழன் அரியணை ஏறினான். பரகேசரி என்ற பட்டத்தையே இவன் புனைந்து கொண்டு அரசாண்டான். இவனுடைய கல்வெட்டுகள் மடத்தில் இரண்டு உள்ளன. இவை 3, 6 ஆகிய ஆட்சி ஆண்டுகளைச் சார்ந்தவை.

இரண்டாம் இராசாதிராசன் (1163-1178)

இரண்டாம் இராசராச சோழனுக்கு பின்பு அவனது மைந்தன் இரண்டாம் இராசாதிராசன் கி.பி. 1166-ஆம் ஆண்டில் சோழ இராச்சியத்திற்குச் சக்கிரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். இவனுடைய 3, 11 ஆகிய ஆட்சி ஆண்டுகளைச் சார்ந்தக் கல்வெட்டுகள் இரண்டு இங்கு உள்ளன.

மூன்றாம் இராசராசன் (1216-1256)

சோழர்களது வீழ்ச்சிக் காலத்தில் ஆட்சிபுரிந்தவன். இவன் காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனால் சிறை பிடிக்கப்பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப்பட்டான். பிறகு போசாள மன்னன் சோமேஸ்வரனால் சிறை மீட்கப்பட்டான். இவனுடைய கல்வெட்டுகள் மடத்தில் மூன்று உள்ளன. இவை 3, 4, 10 ஆகிய ஆட்சி ஆண்டுகளுக்குரியவை.

மூன்றாம் இராசேந்திரன் (1246-1279)

கி.பி. 1246-ஆம் ஆண்டில் இளவரசுப் பட்டம் கட்டப் பெற்று அக்காலம் முதல் தானே ஆட்சியை செய்தவன். இவன் 'பரகேசரி' என்று பட்டம் புனைந்து அரசாண்டவன் என்பது இவனது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது. சில கல்வெட்டுகள் இவனை 'மனுகுலமெடுத்த நெறிமுடி

சூடியருளிய கோப்பரகேசரிவர்மன்' எனவும் 'சமஸ்தஜகதேக வீரன்' எனவும் கூறுகின்றன. இவனது கல்வெட்டொன்று ''பாண்டியர் முடிதலை கொண்டருளிய மகாராசாதிராச நரபதி'' என்று இவனைச் சிறப்பித்துரைக்கின்றது. இவனுடைய இரண்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று மடத்தில் உள்ளது.

மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (1218-1232)

மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் ஆட்சிக்காலம் 14 ஆண்டுகள் ஆகும். இவன் அரியணையில் அமர்ந்த ஆண்டு 1218. இவனுடைய மெய்க்கீர்த்திகள் திருமகள், செயமகள் என்று தொடங்கும். இவனுடைய ஏழாவது ஆட்சி ஆண்டைச் சார்ந்தக் கல்வெட்டு ஒன்று மடம் கிராமத்தில் உள்ளது.

சடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1274)

சடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் விக்கிரமன் காலத்தைச் சேர்ந்தவன். இவனுடைய 13, 15-ஆம் ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகள் இரண்டு மடத்தில் உள்ளன.

மாறவர்மன் வீரபாண்டியன் (1253-1276)

சடாவர்மன் சுந்தரபாண்டியனுக்கு பின்பு ஆட்சிக்கு வந்தவனாவான். இவனுடைய நான்காம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகள் மடம் கிராமத்தில் உள்ளன.

விசயநகரர்

வீரபுக்கண்ண உடையார் (1355-1377)

விசயநகரத்தை சங்கமப் பரம்பரை, சாளுவப் பரம்பரை, துளுவப் பரம்பரை, ஆரவீட்டுப் பரம்பரை ஆகிய நான்கு பரம்பரைகள் ஆட்சிபுரிந்தன. சங்கமப் பரம்பரையைச் சேர்ந்த

முதல் அரசரான ஹரிஹரரின் ஆட்சி 1357-இல் முடிவுற்றது. இவருக்குப்பின் முதலாம் புக்கர் கி.பி. 1377-வரை இருபது ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரது காலத்தில் நெல்லூர், கடப்பை, பெனு கொண்டம், பெல்லாரி, அனந்தப்பூர், மைசூரின் வடபகுதி கோவா, தமிழ்நாடு ஆகிய பகுதிவரை விசயநகர ராச்சியம் விரிவடைந்தது. இவரது ஆட்சியில் சக வருடம் 1320, 1325, 1329 ஆகிய ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்த ஐந்து கல்வெட்டுகள் மடம் கிராமத்தில் உள்ளன.

கம்பண்ண உடையார் (1355-1377)

புக்கரின் புதல்வரான இரண்டாம் கம்பணர் இதபுக்கர் காலத்தில்தான் முஸ்லீம் ஆதிக்கத்தை ஒழிக்கக் கருதி தெற்கே படையெடுத்துச் சென்று தமிழகத்து தொண்டை நாட்டில் இருந்த படைவீட்டு ராச்சியத்தை வென்று, பின்பு மதுரையில் முகமது துக்ளக்கின் காலம் தொடங்கி நடந்து வந்த சுல்தான் ஆட்சியை ஒழித்து, மதுரை நாயக்கர் நேரடி ஆட்சிக்கு வழிகோலி வைத்தார். இரண்டாம் கம்பணர் தென்னாட்டு படையெடுப்பே புக்கர் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இவ்விரண்டாம் கம்பணரே தட்சிண மகா மண்டலேஸ்வரராய் இருந்து தமிழ்நாட்டையும் மேற்பார்த்து வந்து 1374-இல் காலமானார். விசயநகரப் பேரரசு புக்கர் ஆட்சியில் மேலும் விரிவடைந்தது. இவரது சக வருடம் 1285-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த ஏழு கல்வெட்டுகள் மடத்தில் உள்ளன.

ஹரியண்ண உடையார் (1377-1404)

இரண்டாம் ஹரிஹரர் 27 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். இவரது காலத்தில் விசயநகர ஆட்சி தென்னிந்தியா முழுவதும் பரவியது. இம்மன்னர் வளம்வாய்ந்த நாட்டை ஸ்ரீரங்கப் பட்டணம், வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை முதலிய

பிரிவுகளாகப் பிரித்து ஆங்காங்கே ஆளுநர்கள் நியமித்து ஆட்சிபுரியுமாறு செய்தார். இவர் 1404-இல் இறந்தார். மேலும் இவருடைய சக வருடம் 1305-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று மடத்தில் உள்ளது.

வீரபிரதாப தேவராயர் (1426-1446)

வீர விசயராயர்க்குப் பின் அவர் மைந்தரான இரண்டாம் தேவராயர் ஆட்சியை ஏற்றார். பாமினி நாட்டுக்கும் விசய நகரத்துக்கும் இவர் காலத்தில் பகை இருந்து கொண்டே வந்தது. இவர் விசயநகரப் படையைப் பெருக்கும் பொருட்டு முஸ்லீம் வீரர்களைச் சேர்த்தார். இவர் கட்டடப் பிரியராகவும், கவியரசராகவும், புலவரைப் போற்றிப் பேணிய புரவலராகவும் திகழ்ந்தார். தேவராயரது ஆட்சியில் நாடு வளம் பெற்று விளங்கியது. விசயநகரத்தை ஆண்ட முதல் வம்சமாகிய சங்கமப் பரம்பரை இவர் காலத்தில் உச்சநிலை அடைந்திருந்தது. இவருடைய சக வருடம் 1335, 1452 ஆகிய ஆட்சியாண்டுகளைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகள் மடத்தில் உள்ளன.

ஊரும் நாட்டுப் பிரிவும்

இன்று திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் மடம் என்ற பெயருடன் விளங்கும் இக்கிராமம் முன்பு எவ்விதம் வழங்கியது என்பதைக் கல்வெட்டுகளின் வழியாகக் காண்போம். இவ்வூர்க் கல்வெட்டுகளுள் தொன்மையான கல்வெட்டு கம்ப விக்கிரமனின் கல்வெட்டாகும் (283/1919). இவ்வூரினை ''பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர்'' என்று இக்கல்வெட்டுக் குறிக்கிறது. குலோத்துங்க சோழனின் காலம் முதற்கொண்டு இவ்வூர் “ஜெயங் கொண்ட

சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர்'' என்று அழைக்கப்படுகிறது. முதலாம் இராசராசன் காலம் முதற்கொண்டு தொண்டை மண்டலம் “ஜெயங்கொண்ட சோழ மண்டலம்'' என்று அவனது சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டது. அவனுக்கு முன்பாக இப்பகுதி நிர்வாகப்பிரிவு கோட்டங்களின் பெயர்களால் மட்டுமே அழைக்கப்பட்டன. இவன் காலம் முதல் கூடுதலாக ஜெயங்கொண்டசோழ மண்டலமாக அழைக்கப்பட்டது (239, 253, 260, 262, 281/1919).

கண்டாரக் கூளி மாராய நாயக்கனின் பாடல் கல்வெட்டு (268/1919) இவ்வூரை “குளந்தை வளம்பதி” என்று குறிப்பிடுவதின் வாயிலாக குளத்தூர் என்பதை குளந்தை என்ற மொழி நயத்துடன் குறிப்பிடுவது தெரியவருகிறது.

சகம் 1285-ஆம் ஆண்டுக் கல்வெட்டு (கி.பி. 1363) இறைவனை “மடத்து உடையார்'' என்றழைக்கிறது. எனவே இக்காலகட்டத்தில் இவ்வூரின் பெயர் மடம் என்று அழைக்கப் படலாயிற்று. அப்பெயரே இன்றளவிலும் இவ்வூருக்கு நிலைக்கச் செய்துவிட்டது.

பிற ஊர்களும் நாட்டுப்பிரிவுகளும்

கோயிலுக்குக் கொடை அளித்தவர்கள் பற்றியக் கல்வெட்டுக் குறிப்புகளில் கொடை கொடுத்தவரின் ஊர், நாட்டுப்பிரிவு மற்றும் அவர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. அதன்வாயிலாக, அக்காலத்தில் இருந்த நாட்டுப்பிரிவுகள், ஊர்ப்பிரிவுகள் கல்வெட்டுகளின் வாயிலாக அறியப் படுகின்றன.

இவ்வூர்க் கல்வெட்டுகளின் வாயிலாகக் கிடைக்கப் பெறும் நாட்டுப்பிரிவுகள் மற்றும் ஊர்ப்பெயர்கள் பின்வருமாறு:

1. பல்குன்றக் கோட்டத்து இஞ்சிப்பேடு நாட்டு கோதண்ட புரம் (255/1919)
2. படுவூர் கோட்டத்து தனியூர் விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலம் (242/1919)
3. புலியூர் கோட்டத்து புலியூரில் வேநகர் திருவெற்றியூர் (257/1919)
4. வெண்குன்றக் கோட்டத்து பொன்னூர் பற்றில் வெள்ளி ஊர் (253/1919)
5. ஜெயங்கொண்டசோழ மண்டலத்து ஆமூர் கோட்டத்து மாந்தூர் நாட்டு வெங்கரப் பாக்கம் (253/1919)
6. பனையூர் நாட்டு நரியன்னப்பாக்கம் (273/1919)
7. ஒய்மா நாட்டு சங்கரப்பாக்கம் (223/1919)
8. அண்ணமங்கலப்பற்று வடபிடாகை எட்டி ஏந்தல் (228/1919)
9. அண்ணமங்கலப் பற்று வடபிடாகை மழவூர் (260/1919)
10. கீரன்னூர் பற்றுப் பெரும்பூண்டி (262/1919)
11. சோழமண்டலத்து வீரநாராயணச் சதுர்வேதி மங்கலமான சுந்தரபாண்டி சதுர்வேதி மங்கலம் (251/1919)

பிற ஊர்கள்

பள்ளிச்சந்தம், தாழிப்பூண்டி (260/1919), சிலையார் பூண்டி (260/1919), தேவதானம் இடுங்கோளனேந்தல் (260/1919), பெரிய அருகாவூர், சூரன் குப்பமான காங்கேயன் தாங்கல் (262/1919), பந்தமங்கலம் (260/1919), சளுக்கி (237), ஆழியூர் (240), ஊற்றுக்காடு (256/1919), திருமுதுகுன்றம் (266/1919), இளங்காடு (271/1919), இராஜகம்பீரன் மலை (267/1919) ஆகிய சொற்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இறைவன் பெயர்

தற்போது மடம் கோயில் இறைவன் தடாகபுரீஸ்வரர் என்று வடமொழியில் அழைக்கப்படுகிறார். இதன் பொருள் தடாகபுரியின் ஈசுவரன் ஆகும். குளத்தூர் என்பதின் வடமொழிப்பெயாப்பே தடாகபுரி என்பதாகும். இவ்வூர் கல்வெட்டுகளில் குளத்தூர் என்றே அழைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பின்னரே குளத்தூர் என்பது தடாகபுரி என்று மாற்றம் பெற்றிருக்கவேண்டும். கல்வெட்டுகளில் இவ்வூரில் உள்ள இரண்டு கோயில்கள் முக்கியமான கோயில்களாகச் சொல்லப்படுகின்றன. ஒன்று குளந்தை ஆண்டார் கோயில். மற்றொன்று திருவக்நீசுவரமுடையார் கோயில் ஆகும். இது குளத்தை ஆண்டார் என்ற சொல்லில் இருந்து குளந்தை ஆண்டார் என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதையும், இந்த குளந்தை ஆண்டார் என்பதின் வடமொழி ஆக்கமே தடாகபுரீசுவரர் என்பதையும் காட்டுகிறது.

குளந்தை ஆண்டார்

குளந்தை ஆண்டார் என்ற பெயர் முதன் முதலாக ராசாதிராசன் கல்வெட்டில் (239/1919) காணப்படுகிறது. பிறகு மூன்றாம் இராசராசன் (256/1919), இராசநாராயண சம்புவராயர் (244/1919), சக வருடம் 1285, 1305, 1325 ஆண்டுக் குறிப்புகள் உள்ள கல்வெட்டுகளில் (225, 251, 257/1919) காணப்படுகின்றன. எனவே சோழர் காலம் தொடங்கி தற்காலம் வரையில் இக்கோயில் இதே பெயரால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் அறியலாம்.

அக்னீசுவரமுடையார்

திருவக்நீசுவரமுடையார் என்ற கோயிலின் பெயர் முதலாம் குலோத்துங்க சோழன் தொடங்கி (234, 241, 255, 271, 276/1919) விக்கிரம சோழன் (237, 242/1919), மாறவர்மன் விக்கிரம பாண்டியன் (230/1919), சடாவர்மன் சுந்தர பாண்டியன் (240/1919), சுந்தரபாண்டியன், இராசநாராயண சம்புவராயன் (245/1919) சகம் 1329, (236/1919) சகம் 1355 (229/1919) ஆகியோரது கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. எனவே அக்னீசுவரமுடையார் கோயிலும் முதலாம் குலோத்துங்க சோழன் காலம் தொடங்கி விசயநகரர் காலம் வரை இருந்திருக்கிறது என அறியமுடிகிறது. சக வருடம் 1335-ஆம் ஆண்டைச் சேர்ந்த (கி.பி. 1433) கல்வெட்டு திருவக்நீசுவரமுடைய மகாதேவர் என்று இறைவன் பெயரையும், அறம் வளர்த்த நாச்சியார் என்று இறைவியின் பெயரையும் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. திருவக்நீசுவரமுடையார் கோயிலுக்கு என்று தனியே ஒரு அம்மன் ஆலயம் கி.பி. 1433-இல் இருந்ததை இது வெளிப்படுத்துகிறது. இன்று இரண்டாம் திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் உள்ள சிதைந்த கோயில் இக்கோயிலாக இருக்கலாம். இக்கோயிலுக்கு கொடுக்கப்பட்ட கொடைகள் குளந்தை ஆண்டார் கோயிலிலும், கோயிலுக்கு வெளியே உள்ள ராஜாக்கல் என்ற பாறையிலும் காணப்படுகின்றன.

பகவதி

ராஜாக்கல் பாறையில் உள்ள ஒரு கல்வெட்டு ஒரு வரியில் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது (272/1919). அதனில் "பகவதி நெடுங்காநிலை" என்று உள்ளது. ராஜாக்கல் பாறையில் ஒரு துர்கையின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் முற்காலச் சோழர் கலைப்பாணியில் உள்ளதால் மேற்சொன்ன அக்னீசுவரன் கோயில், குளந்தை ஆண்டார் கோயில் ஆகிய கோயில்கள் ஏற்படுவதற்கு முன்னதாகவே இவ்வூரில் கொற்றவை வழிபாடு இருந்துள்ளதை அறியமுடிகிறது.

சப்தமாதர்

தடாகபுரீஸ்வரர் கோயில் முதல் திருச்சுற்று தென் சுவரில் உள்ள சக வருடம் 1305 (கி.பி. 1383)-ஐச் சேர்ந்த கல்வெட்டு (251/1919) ஒன்று குளந்தை ஆண்டார் கோயிலில், சோழ மண்டலத்து வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்தில் உள்ள சிறுபுளூர் உத்தம நம்பி கருஞ்சிறுத்தனாயன் என்பவன் சப்தமாதர்கள் கோயிலை எடுத்து சப்தமாதர்களைப் பிரதிட்டை செய்தார் என்று குறிப்பிடுகிறது. முதல் திருச்சுற்று மாளிகை தென்புறச் சுவரில் ஒரு மாடம் அமைக்கப்பட்டு விநாயகர், வீரபத்ரர் ஆகியோருடன் கூட ஒரு சப்தமாதர் தொகுதி சிற்பம் காணப்படுகிறது. இதுவே மேற்சொன்ன கல்வெட்டில் குறிக்கப்படும் சப்தமாதராக இருக்கக்கூடும்.

சம்பந்தர் கோயில்

சகவருடம் 1422 -ஐச் சேர்ந்த (கி.பி. 1500) ஒரு பாடல் கல்வெட்டு சென்னய்ய கிருஷ்ணய்யன் என்பவன் குளந்தையில் சம்பந்தர்க்கு கோயில் கண்டான் என்று குறிப்பிடுகிறது (282/1919). இதன் மூலம் குளத்தூர் என்ற இந்த ஊர் குளந்தை என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. இவன் எடுத்த கோயில் எது என்பது உறுதியாகத் தெரியாவிட்டாலும் இரண்டாம் திருச்சுற்றின் தென்புறத்தில் தெய்வம் ஏதும் இல்லாமல் உள்ள சிதைந்த கோயில் இவன் எடுத்த கோயிலாக இருக்கலாம்.

புவனநாயகேஸ்வரமுடைய நாயனார்

புவனநாயகேஸ்வரமுடைய நாயனார் பற்றிய கல்வெட்டு மாறவர்மன் வீரபாண்டியன் காலத்தைச் சேர்ந்ததும், முதல் திருச்சுற்று வடசுவரில் உள்ளதுமான ஒரு சிறந்த கல்வெட்டாகும் (250/1919). கைக்கோளன் ஒருவன் தான் பிரதிட்டை செய்த புவனநாயகேஸ்வரமுடைய நாயனார்க்கு அமுதுபடிக்காக நெல்லும், பணமும், விளக்கும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இவ்விறைவன் எது என்று அறிய இயலவில்லை.

சுயம்புலிங்க கோயில்

கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்ட 1919-ஆம் ஆண்டில் "அப்பரசர் புத்திரர் விட்டப்பர் தம்மம்" என்ற வரி கல்வெட்டை சுயம்புலிங்கேஸ்வரர் கோயிலில் படியெடுத்ததாகக் குறித்துள்ளனர். இன்று இந்த கல்வெட்டு (249/1919) தடாகபுரீஸ்வரர் கோயிலில் முதல் திருச்சுற்று மாளிகை மேற்குப் பகுதியில் உள்ள ஒரு சிறு கோயில் ஆகும்.

இக்கோயில் முன்னர் என்ன பெயரால் அழைக்கப்பட்டது என்பது தெரியவில்லை. கல்வெட்டும் கோயிலை எடுப்பித்ததாகக் குறிப்பிடாது "தம்மம்" என்ற அளவில் மட்டுமே குறிப்பிடுகிறது. ஒரு வேளை தர்மம் என்று குறிக்கப்படும் கொடை, கல்வெட்டில் உள்ள கோயிலையே கொடையாக எடுத்துக்கொள்ளலாம். ஏற்கனவே குறிப்பிட்ட புவன நாயகேஸ்வரமுடைய நாயனார் கோயில் என்று குறிப்பிடும் அளவு வேறு எந்த கோயிலும் இங்கு இல்லாததால் இக்கோயில் சுயம்புலிங்க கோயிலாக இருக்கலாம்.

கோயில் கட்டடங்களின் காலம்

இறைவன் பெயர் என்ற பகுதியில் குறிப்பிட்டது போல இவ்வூரில் முதன் முதலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பகவதிக்கு மட்டும் பாறையில் சிற்பம் செதுக்கி கோயில் இருந்திருக்க வேண்டும். பிறகு குலோத்துங்கன், இராசாதிராசன் காலங்களில் திருவக்நீசுவரமுடையார் கோயில், குளந்தை ஆண்டார் கோயில் ஆகியவை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. அதன் பிறகு இக்கோயில் வளாகத்தில் புவனநாயகேஸ்வரமுடைய நாயனார் கோயில், சப்தமாதர் கோயில், சுயம்புலிங்கர் கோயில், சம்பந்தர் கோயில் ஆகியவை அடுத்தடுத்து தோன்றி விரிவடைந்துள்ளது.

தேவரடியார் எடுத்த திருமண்டபம்

இன்று கல்யாண மண்டபம் என்று அழைக்கப்படும் மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் (265/1919) இராசநாராயண சம்புவராயர் காலத்தில் குளந்தை ஆண்டார் கோயிலில் காதலியார் என்ற தேவரடியார் திருமண மண்டபம் எடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திருமண மண்டபம் இன்று இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் பெரிய அளவில் அமைந்துள்ளது. எனவே இராசநாராயண சம்புவராய காலத்தில் (கி.பி. 1368) இக்கோயில் வளாகம் முழுதும் குளந்தை ஆண்டார் கோயில் என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

இரண்டாம் திருச்சுற்று மதில்

வீரபொக்கண்ண உடையாருடைய கல்வெட்டு (271/1919) திருநல்லிக்கிழான் நல்லக்கம்பன் தென்னவராயன் என்பவன் குளந்தை ஆண்டார் கோயில் இரண்டாம் திருச்சுற்று

மதில்களை எடுத்தான் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. இன்று பெரிதும் சிதைந்துள்ள இரண்டாம் திருச்சுற்று மதிலே இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிலாகும்.

கண்டாரக் கூளிமாராய நாயக்கன் திருக்கோபுரம்

இன்று பெரிதும் சிதைந்துள்ள கல்யாண மண்டபத்தின் நேர் எதிருமான திருக்கோபுரம் தொடர்பாக நமக்கு மூன்று கல்வெட்டுகள் கிடைத்துள்ளன (267, 268, 269/1919). இவற்றில் சக வருடம் 1285-ஐச் சேர்ந்த வீரபொக்கண்ண உடையார் கல்வெட்டு (கி.பி. 1363) இக்கோபுரத்தைக் கண்டாரக் கூளிமாராய நாயக்கர் திருக்கோபுரம் என்று குறிப்பிடுகிறது. சோமய்ய தண்ணாயக்கர் மகனான இவர், சம்புவராயரை வென்று சிறைப்பிடித்து, சம்புவராயன் மலையாகிய ராஜகம்பீரன் மலையையும் கைப்பற்றியதின் வெற்றிச் சின்னமாக கட்டிய கோபுரம் என்றும் அது திருவக்நீசுவரமுடைய மகாதேவர் கோயிலில் இரண்டாம் திருச்சுற்றில் உள்ள திருக்கோபுரம் என்றும் குறிப்பிடுகிறது (267/1919).

இதே கோபுரம் தொடர்பாக இரண்டாவது கல்வெட்டு (268/1919) பாடல் வடிவிலானது. "வேல் தடக்கை கனைக் களல் கண்டாரக்கூளி" எனவும் "குளந்தை வலம் பதிஈசர் கோலமலர் தாள் வணங்கி கண்ட கோபுரம்" என்றும் பாடல் வடிவில் இக்கோபுரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இதே கோபுரத்தில் உள்ள மூன்றாவது கல்வெட்டில் (269/1919) "கோபுரமும் திருவாசலும் தூணாண்டார் ஆற்றூராழன் கொடை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்கு ஆண்டு குறிப்புகளோ, மன்னர் ஆட்சி குறிப்புகளோ இல்லை. எனவே இவர் கண்டாரக்கூளி மாராய நாயக்கருக்கு பிற்பட்டவராகவோ அல்லது இக்கோபுரம் பழுதடைந்துள்ளதைப் புதுப்பித்தவராக இருக்கலாம். மேலும் இக்கோபுரத்தில் இரண்டு இடங்களில் சம்புவராயர்களின் சின்னங்களான எருதும், சந்திரனும் காணப்படுகின்றன.

கொடைகள்

மடத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில் மூன்று வகையான கொடைகள் காணப்படுகின்றன.

1. நிலக்கொடை மற்றும் வரிநீக்கம்
2. விளக்கு
3. கட்டடங்கள் எழுப்புதல் மற்றும் தெய்வங்களை பிரதிட்டை செய்தல்.

நிலக்கொடைகள்

மடத்திலுள்ள தொன்மையானக் கல்வெட்டான (283/1919) கம்பவர்மனின் கல்வெட்டில் ஏரியைப் பராமரிப்பதற்காக சழையாப்பாறை செறுவு என்ற நிலம் வணிகர் ஒருவரால் குளத்தூர் ஊராரிடமிருந்து விலைக்குப் பெறப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏரிப் பராமரிப்பிற்காக கொடுக்கப்பட்ட நிலம் 'ஏரிப்பட்டி' என்று சொல்லப்பட்டுள்ளது.

கி.பி. 1433-ஐச் சேர்ந்த கல்வெட்டு (229/1919) கோயில் கைக்கோளர்களில் ஒருவரான அமரக்கோனார் குளந்தை ஆண்டார் என்பவருடைய தமக்கையார் அறம் வளர்த்த நாச்சியார் என்பவர் விசயநகர மன்னரான வீரபிரதாப தேவராயரை நேரில் சென்று பார்த்து கோயிலுக்காக வரிநீக்கம் செய்யப்பட்ட நிலம் பெற்று, அதற்குரிய ஆணையை செப்பேட்டில் எழுதி வாங்கிக்கொண்டு வந்து கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. இப்படி அரசனின் ஆணையின் பேரில்

பெறப்பட்ட நிலம் இக்கல்வெட்டில் 'திருமுகக்காணி' என்று சொல்லப்பட்டுள்ளது. திருமுகம் என்பது அரசாணையைக் குறிக்கும் சொல்லாகும். காணி உரிமை கோயிலைச் சேர்ந்த ருத்ரமாகேஸ்வரர்களால் அரசின் ஆணைக்கிணங்க அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் திருமுகக்காணி உரிமையைக் கோயில் கைக்கோளர் விற்கவோ, ஒற்றிவைக்கவோ, தான தர்மங்களாக வழங்கவோ உரிமை உடையவர் என்று இச்செப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளது.

மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் ஏழாவது ஆண்டுக் கல்வெட்டு (230/1919) இக்கோயிலில் ஆனி மாதம் நிகழும் திருவிழாவிற்காகவும், நாள்தோறும் நிகழும் வழிபாடு களுக்காகவும், மழவூர், கோதண்டபுரம் ஆகிய ஊர்களில் உள்ள நன்செய், புன்செய் நிலங்கள், ஏரி மற்றும் அனைத்துச் செல்வங்களையும் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. இந்த இரு ஊர்களும் தேவதானக் கொடைகளாகக் கொடுக்கப்பட்டதால் இவ்வூர்களிலிருந்து பெறப்பட்ட கடமை, காசாயங்கள், நெல்லாயங்கள் மற்றும் அனைத்து வரிகளும் இறை நீக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இறை நீக்கத்தை இவ்விரு ஊர்கள் அடங்கிய அண்ணமங்கலப்பற்றைச் சேர்ந்த நாட்டவர்களும், அகம்படியாரும், அகம்படி முதலிகளும், பன்னாட்டவரும், பன்முதலிகளும் தென்னாற்றூரில் கூடி முடிவு செய்து கொடுத்துள்ளனர்.

சக வருடம் 1329-ஐச் சேர்ந்த விசயநகரக் காலக் கல்வெட்டு (236/1919) அரசனுடைய உடல்நலத்துக்காக பழைய தேவதானமாகிய மழவூரில் பெறப்படும் காசாயம், நூலாயம், மழவூர், நத்தம் ஏரி உள்பட அனைத்தையும் நீக்கிக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது.

கோயில் திருப்படிமாற்று வழிபாட்டுக்கு ஆழியூர் என்ற ஊரை தேவதான இறையிலியாகக் கொடுத்ததாக சுந்தரபாண்டியன் கல்வெட்டுகள் (240/1919), (246/1919) தெரிவிக்கின்றன.

சக வருடம் 1450-ஐச் சேர்ந்த கல்வெட்டு (270/1919) பூசைக்காக குறிப்பிட்ட ஒரு ஊர் வழங்கப்பட்டதையும், சக வருடம் 1325-ஐச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு (260/1919) கோயிலில் திருநாள் பூசைக்கும், சந்திவிளக்கு, நந்தாவிளக்கு, நந்தவனம் போன்றவற்றுக்கும் இறையிலியாக தேவதான நிலங்கள் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றன.

சக வருடம் 1320-ஐச் சேர்ந்த கல்வெட்டு (262/1919) 'காங்கேயன் சந்தி' என்ற ஊர் கட்டளை வழிபாடு கோயிலில் தொடங்கப்பட்டதையும், அதற்காக குறிக்கப்பட்ட ஊர்களின் வரிவருவாய் ஒதுக்கப்பட்டதையும் சொல்கிறது.

சக வருடம் 1363-ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டு (228/1919) இவ்வூரில் இருந்த குளந்தை ஆண்டார் கோயிலின் மடபதி மாஹேஸ்வரரான புவனேகவாகு தேவர்க்கு மடப்புற இறையிலியாக ஒரு ஊர் கொடுக்கப்பட்டு, அவ்வூரில் இருந்து கிடைத்த வரிவருவாய்கள் மடத்திற்கு ஒதுக்கப்பட்டதைச் சொல்கிறது.

இதே போல் இறைவனுக்கு சந்தனக்காப்பினால் அலங்காரம் செய்வதற்காகவும் (238/1919), அர்த்தசாமத்தின் போது வழிபாடுகள் நிகழ்த்துவதற்காகவும் (241/1919), சப்தமாதர்களை பிரதிட்டைச் செய்து அவற்றிற்கான வழிபாடுகள் செய்வதற்காகவும் (251/1919), நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டதை சில கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன.

விளக்குகள்

இராஜாக்கல் என்ற பாறையில் உள்ள நான்கு கல்வெட்டுகள், வேட்டையாடும்போது கைத்தவறுதலாக ஒன்றும் அறியாத சிலரைக் கொன்ற பாவத்திற்கு பரிகாரமாக கால், அரைக்கால், ஒன்று என்ற அளவுகளில் இவ்வூர் கோயிலில் விளக்குகள் எரிக்கப் பணிக்கப்பட்ட செய்திகளைச் சொல்கின்றன (273, 274, 278, 279/1919).

மேலும் இரண்டு கல்வெட்டுகள் நந்தா விளக்கு எரிப்பதற்காக பசுக்கள் வழங்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளன. பாவ பரிகாரத்திற்காக கொடை கொடுக்கப்பட்ட அரைக்கால் விளக்கிற்கு 12 ஆடுகள் (274/1919) அளிக்கப்பட்ட செய்தி தெரியவருகிறது. நந்தா விளக்குகளுக்காக 32 பசுக்களோ அல்லது 96 ஆடுகளோ குலோத்துங்க சோழன் காலத்தில் வழங்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதைக் கல்வெட்டு செய்திகளின் மூலம் அறிய முடிகிறது. மற்றொரு கல்வெட்டின் மூலம் (255/1919) நந்தா விளக்கெரிக்க இஞ்சிப்பேடு நாடு என்ற ஊரையே தானமாக வழங்கப்பட்ட செய்தியை அறியலாம்.

கட்டடங்களும் தெய்வங்களும்

திருமண மண்டபம் எடுத்தல், வெற்றிச் சின்னமாக கோபுரம் எடுத்தல், சப்தமாதர்களைப் பிரதிட்டை செய்தல், சம்பந்தர்க்குக் கோயில் எடுத்தல், திருச்சுற்று மதில் எடுத்தல், வாசலும் நிலைக்காலும் எடுத்தல், சிவலிங்கங்களைப் பிரதிட்டை செய்தல் போன்றவற்றைப் பற்றியும் இவ்வூர்க் கல்வெட்டுகளின் வாயிலாக நம்மால் அறியமுடிகிறது.

பிற கொடைகள்

மேலே சொல்லப்பட்டவைத் தவிர அக்னீசுவரமுடையார் கோயிலில் வேதம் ஓதும் பிராமணர்களுக்கு நிலக்கொடைகள் வழங்கப்பட்டதையும் (231/1919), அடியார்களுக்கு உணவு அளிப்பதற்காக நிலக்கொடைகள் கொடுக்கப்பட்டதையும் (242/1919), பக்தர்களுக்கு பிரசாதம் அளிப்பதற்காக நிலங்கள் வழங்கப்பட்டதையும் இவ்வூர்க் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

விழாக்களும் வழிபாடுகளும்

விழாக்கள்

குலோத்துங்க சோழனின் ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டில் "அக்னீசுவரமுடைய மகாதேவரை நாட்டுக்குத் திருநாளாக திருநாள் எழுந்தருளிவிக்கவும்" என்ற வரிகளில் கோயிலில் நிகழும் திருவிழாவிற்காக நிதி ஒதுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. மாறவர்ம விக்கிரமபாண்டியனின் ஏழாவது ஆண்டுக் கல்வெட்டு (230/1919) திருவக்நீசுவரமுடையார் ஆனித் திருநாளன்று எழுந்தருள வேண்டிய செலவுகளுக்காக மழவூர், கோதண்டபுரம் ஆகிய ஊர்கள் தேவதானமாக வழங்கப்பட்டன என்பதைச் சுட்டுகிறது.

'மகர சங்கராந்தி' எனப்படும் தைப் பொங்கல் திருநாளில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்துள்ளதை சக வருடம் 1320-ஐச் சேர்ந்த வீரபொக்கண்ண உடையார் கல்வெட்டுத் (262/1919) தெரிவிக்கிறது.

வழிபாடுகள்

மேற்கூறிய கல்வெட்டு 'காங்கேயன் சந்தி' என்ற ஒரு கட்டளை வழிபாட்டிற்குப் பெரும்பூண்டி என்ற ஊரில் உள்ள எல்லா நிலங்களும் வழங்கப்பட்டதைக் குறித்துள்ளது. சடாவர்மன் சுந்தரபாண்டியனின் 15-ஆம் ஆண்டு கல்வெட்டு

அர்த்தசாமப் பூசை நிகழ்ந்ததைக் குறிப்பிடுகிறது. சக வருடம் 1452-ஐச் சேர்ந்த (270/1919) அச்சுததேவ மகாராயரின் கல்வெட்டு அச்சுதராயரின் நலத்திற்காக மகாபூசையை நடத்துவதற்கு பொத்தப்ப நாயக்கர் என்பவரின் பேரன் கொடை கொடுத்ததைச் சொல்கிறது. மேலும் சில கல்வெட்டுகள் திருமஞ்சன நீர் கொண்டு வருவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதையும், இறைவனுக்கு வேண்டிய மலர்கள் விளைய நந்தவனங்கள் ஏற்படுத்தியதையும், இறைவனுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் நிகழ்த்துவதற்காக நிலம் கொடுத்ததையும் குறிக்கின்றன.

நீர்நிலைகள்

வெங்காலம்மன் குட்டை

வெங்காலம்மன் குட்டையின் அருகில் உள்ள பாறையில் உள்ள கல்வெட்டு (284/1919) கோயில் தேவரடியார் திருப்பணி நாச்சியார் என்பவர் விசயநகர மன்னர் காலத்தில் (14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்) ஆனந்த வருடம் ஆடி மாதத்தில் இக்குளத்தை எடுத்ததாகக் குறிப்பிடுகிறது. இன்று இந்தக் குளம் கரைக் கட்டுமானம் ஏதுமில்லாமல் சிறிய குட்டையாகக் காட்சியளிப்பதால் வெங்காலம்மன் குட்டை என்று மக்களால் அழைக்கப்படுகிறது.

அண்ணாமலையான் குட்டை

அண்ணாமலையான் குட்டையின் அருகில் உள்ள பாறையில் சக வருடம் 1494-ஐச் சேர்ந்த கல்வெட்டு (285/1919) சென்னய்ய கிருஷ்ணய்யன் என்பவன் இறைவனுக்கு நான்கு விளக்குகள் வைத்ததையும், அண்ணாமலையான் குட்டையிலிருந்து இறைவனின் திருமஞ்சனத்துக்கு நீர் கொண்டுவர ஏற்பாடு செய்ததையும் குறிக்கிறது.

இந்த அண்ணாமலையான் குட்டை இறைவனின் திருமஞ்சனத்துக்காகப் பயன்படுத்தப்பட்டமையால், திருமஞ்சனக்குளமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தக் கல்வெட்டில் குறிக்கப்படும் சென்னய்ய கிருஷ்ணய்யன் முன்பொரு கல்வெட்டில் (282/1919) சம்பந்தருக்குக் கோயில் எடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

நீர்ப்பாசனம்

விக்கிரம சோழன் கல்வெட்டு (237, 242/1919) நிலங்கள் பலவற்றைக் கொடையாகக் கொடுக்கப்பட்டபோது, காடுகள் அழித்து மேடுகள் திருத்தி விளைநிலமாக மாற்றிக் கொள்ளலாம் என்று குறிப்பிடுகிறது. இது, "இந்நிலத்திற்கு வேண்டும் தண்ணீரின் கடை நீரும் பாயக்கடவதாகவும்" என்ற கல்வெட்டு வரிகள் மூலம் அறியப்படுகிறது. இது கால்வாயைத் திறந்து விடும்பொழுது முதன் முதலில் பாயும் நீராகவும், கால்வாயினை மூடும்பொழுது கடைசியாகப் பாயும் நீராகவும் இருக்க வேண்டும். ஏனெனில் வறண்டு இருக்கிற நிலத்தில் நீர் நன்கு ஊறி கீழ் இறங்குவதற்கு முன் வயல் நிரம்பி நீர் வெளியே சென்றுவிடக் கூடும். நீர் தரையில் இறங்கியதும் தேவையான அளவுக்கு பாயாமல் இருக்கவும் வாய்ப்பு உண்டு. எனவே இந்த குறிப்பிட்ட சலுகையைக் குறித்துள்ளனர் என்று சொல்லலாம்.

மூன்றாம் இராசராசன் கல்வெட்டுகள் (238, 253, 256/1919) ஒரு நிலத்தின் எல்லையைப் பற்றிக் கூறும்பொழுது தெற்கில் வட்டக்கேணி ஒன்றைக் குறிப்பிடுவதின் மூலம், நிலத்தை ஒட்டி தற்போது இருப்பது போல அன்றும் வட்ட வடிவமான நீர்ப்பாசனக் கிணறுகள் இருந்திருக்கலாம் என அறியமுடிகிறது.

குலோத்துங்க சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு நிலத்தின் எல்லையைக் குறிப்பிடும்பொழுது "ஏரி பள்ளத்தூம்பின் கீழ் பள்ளவாய்க்காலுக்கு வடக்கும் ஏரிக்கரைக்கு கிழக்கும்" என்று குறிப்பிடுவதின் மூலம் ஏரிக்கரைகளில் தூம்புகள் அமைக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கிறது. பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதும், ஏரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட தூம்புகள் இருந்ததால், பள்ளத்தில் உள்ள தூம்பு, ஓரத்தில் உள்ள தூம்பு என்று தூம்புகளுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தத் தூம்பில் இருந்து வெளியேறிய கால், பள்ளவாய்க்கால் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. ஏரியின் பள்ளமான தூம்புகள் ஏரியில் நீர் குறைந்து கொண்டே வந்து இறுதிக்கட்டமடையும் வரை நீர்ப்பாசனத்துக்கு உதவக்கூடியவை ஆகும்.

விக்கிரம சோழனின் கல்வெட்டைப் போல, குலோத்துங்க சோழனின் கல்வெட்டிலும் "இத்தூம்பிற் தலை நீர் இடைநீர் பாயக் கடவதாகவும்" என்ற சலுகைக் குறிக்கப் பட்டிருக்கிறது.

கோயில் நிர்வாகம்

இவ்வூர் கல்வெட்டுகளில் (229, 233, 243, 257, 266/1919) கொடுக்கப்பட்ட கொடைகளைப் பாதுகாத்து, பராமரிக்கும் பொறுப்பு ருத்ரமாகேஸ்வரர் மற்றும் மாகேஸ்வரர் என்ற சிவனடியார்களைச் சார்ந்ததாகக் குறிப்புகள் உள்ளன. எனவே இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பில் பெரும்பங்கு இந்த சிவனடியார்களிடம் இருந்திருப்பதை நம்மால் அறியமுடிகிறது. விசயநகரர் காலத்திய இரண்டு கல்வெட்டுகள் (243, 244/1919) புவநேகவாகு என்பவர்

மாகேஸ்வர கணக்குக் காணி உடையவராகக் குறிக்கப் பட்டுள்ளார். எனவே இந்தக் கோயிலை நிர்வகித்த மாகேஸ்வரர்களுக்கென்று தனிப்பட்ட வருவாய்க் கணக்குகள் இருந்தது அறியப்படுகிறது.

இராசநாராயண சம்புவராயர் கல்வெட்டு (244/1919) கோயிலுக்கு கணக்காளர் ஒருவரை நியமித்ததைக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு (243/1919) 'கணக்குக் காணி' என்ற உரிமை நிலத்தைக் காட்டுகிறது. எனவே கோயில் கணக்காளர்களின் பணிக்கென்று காணி உரிமை நிலம் மற்றும் வருவாய்களும் இருந்திருக்கின்றன என்று அறிகிறோம். கி.பி. 1362-ஐச் சேர்ந்த கல்வெட்டு (233/1919) கோயிலுக்கு என்று 'மெய்க்காவல் காணி' இருந்ததாகச் சுட்டுகிறது. எனவே கோயில் உடைமைகளைப் பாதுகாக்க மெய்க்காவலர்கள் இருந்தார்கள் என்பது அறியப்படுகிறது.

கி.பி. 1361-ஐச் சேர்ந்த இக்கல்வெட்டு (244, 245/1919) கோயில் கண்காணிப் பணியைக் குறிப்பிடுகின்றன. எனவே கோயிலின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காகக் கண்காணிப்பாளர்கள் இருந்திருக்கின்றனர் என்பது தெரியவருகிறது. சக வருடம் 1325-ஐச் சேர்ந்த ஒரு கல்வெட்டு (257/1919) கோயிலுக்கு என்று அடிகுடிகள் இருந்ததைச் சுட்டுகிறது. அடிகுடிகள் என்பவர்கள் கோயிலைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கோயிலுக்காக வழிவழியாக உரிமைகளுடன் பணியாற்றுபவர்கள் ஆவர்.

சமுதாயம்

இவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் வாணிகர், கைக்கோளர், அகம்படியார், அகம்படி முதலிகள், நாட்டவர், வெள்ளாளர், மடங்களைச் சேர்ந்த மாகேஸ்வர அடியார்கள்,

கோயில் பணியாளர்கள், தேவரடியார் என்று பலதரத்து மக்களைக் காட்டுகின்றன. கம்பவர்மன் கல்வெட்டில் (283/1919) குளத்தூர் வாணியர் சயவல்லவன் குறிக்கப் பட்டுள்ளான். சக வருடம் 1355-ஆம் ஆண்டு கல்வெட்டில், “இக்கோயில் கைக்கோளரில் அமரக்கோனார் குளந்தை ஆண்டார்” என்று குறிக்கப்பட்டுள்ளதின் வாயிலாக கோயிலுக்கென்று கைக்கோளர்கள் இருந்ததை அறியலாம். இவருக்கென்று காணி உரிமையை ஏற்கனவே சொல்லியது போல அவரது தமக்கை அறம் வளர்த்த நாச்சியார் அரசனைச் சந்தித்து செப்பேட்டு ஆவணமாக பெற்றுத் தந்திருக்கிறார் என்ற செய்தியும் அறியப்படுகிறது (229, 250/1919) .

மாறவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு, இவ்வூர் கைக்கோளர் ஒருவர் புவனநாயக ஈஸ்வரமுடைய நாயனாரை பிரதிட்டை செய்து தெய்வத்திற்கு வேண்டிய வழிபாட்டுச் செலவுகளுக்கு நெல்லும் பணமும் கொடுத்ததைக் குறிப்பிட்டுள்ளது (250/1919).

சோழ மன்னன் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு (230/1919) ஊற்றுக்காட்டைச் சேர்ந்த செந்தாமரைக் கண்ணன் சோழக்கோன் என்ற வெள்ளாளர் ஒருவர் விளக்கு எரிப்பதற்காக பசுக்கள் கொடுத்ததைத் தெரிவிக்கிறது. மாறவர்மன் விக்கிரம பாண்டியனுடைய கல்வெட்டு தென்னாற்றூரில் அண்ணமங்கலப்பற்று நாட்டவர், அகம்படியார், அகம்படி முதலிகள், பன்னாட்டவர்கள், பன்முதலிகள் ஆகியோர் கூடி ஆனித் திருவிழாவுக்காக நிலவகைகள் ஒதுக்கியதைக் குறிப்பிட்டுள்ளது. மேலும் அண்ணமங்கலப்பற்றைச் சார்ந்த நாட்டவர் எனப்படும்

விவசாயப் பெருமக்களும், அகம்படியார் என்ற படை வீரர்களும், அகம்படி முதலியார் என்று சொல்லப்படும் படைத்தலைவர்களும் கூடினர் என்ற செய்தியும் அறியப் படுகிறது. இதில் அண்ணமங்கலப்பற்றைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி பிற இடத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர் என்பதை பன்நாட்டவர்கள், பன்முதலிகள் என்று குறிப்பிடுவதின் மூலம் அறிகிறோம். நிலங்கள் நாட்டவர் எனச் சொல்லப்படும் விவசாயப் பெருமக்கள் கையிலே இருந்தாலும் இந்த 13-ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் படைவீரர்களும் நில ஆளுமை உரிமைகளைப் பெறத் தொடங்கியுள்ளனர். எனவேதான் இந்த கல்வெட்டில் வரிநீக்கம் செய்வது தொடர்பாக படைவீரர்களும், படைத்தலைவர்களும் கூடி இருந்தனர் என்ற செய்தி அறியப்படுகிறது.

இவ்வூர் கல்வெட்டுகள் பலவற்றின் மூலம் மடம் ஒன்று இருந்ததையும், மடத்துக்கென்று மடாதிபதிகள் இருந்ததையும், இந்த மடாதிபதிகள் கோயில் நிர்வாகத்தில் பங்கு பெற்றமையும் அறியமுடிகிறது. மேலும் இக்கோயிலில் உள்ள சிற்பங்களின் மூலம், உத்ராட்சமாலை அணிந்த புதுமையான அடியார் களையும் நம்மால் காணமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இந்த மடத்து அதிபதிகள் அதிக செல்வாக்குடன் இருந்ததால் இந்த ஊரின் பெயரே மடம் என்று அழைக்கும் அளவுக்கு மாறிவிட்டது என்பதனையே அக்காலக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

பெண்கள் நிலை

மடம் கல்வெட்டு ஒன்று சம்புவராயர் காலத்தில் குளந்தை ஆண்டார் கோயிலைச் சேர்ந்த தேவரடியார் பெண் ஒருத்தி திருமண மண்டபம் எடுத்த செய்தியைத் தருகிறது (265/1919).

இவள் குளந்தை ஆண்டார் கோயிலில் தேவரடியாரில் சம்பர் மகள் அமராபதி காத்தார் மகள் காதலியார் என்று குறிக்கப் பட்டுள்ளாள். இவள் கோயில் தேவரடியாரில் ஒருவளாகக் குறிக்கப்படுவதால் கோயிலில் பல தேவரடியார்கள் இருந்திருக்கிறார்கள் என்றும், இவளைக் குறிப்பிடும்பொழுது இவளுடைய தாயையும், தாயின் தாயையும் குறிப்பதிலிருந்து இந்த மூன்று தலைமுறையினருமே சிறப்பு விளங்கியவராக இருந்திருக்கலாம் என்று அறியப்படுகிறது.

மேலும் வெங்காலம்மன் குட்டையில் உள்ள கல்வெட்டு (284/1919) விசயநகரர் காலத்தில் கோயில் தேவரடியாரில் திருப்பணி நாச்சியார் என்பவர் குளத்தை வெட்டியதாகக் குறிப்பிடுகிறது. எனவே இந்த காலக்கட்டத்திலும் பல தேவரடியார்கள் இருந்திருக்கிறார்கள் என்பதும், அவர்கள் மிகுந்த செல்வம் உடையவர்களாக விளங்கியதோடு மட்டுமல்லாமல், மண்டபம், குளம் போன்றவற்றைக் கொடையாக கொடுக்கும் அளவுக்கு சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்று விளங்கியிருக்கிறார்கள் எனவும் அறியமுடிகிறது.

மற்றொரு விசயநகரர் காலக் கல்வெட்டு (229/1919), கைக்கோளர் பெண் ஒருத்தி நேரடியாக அரசனைச் சந்தித்து, தனது சகோதரர்க்கு கோயில் கைக்கோளர் காணியைப் பெற்று தந்து இருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பெயர்கள்

1. செந்தாமரைக் கண்ணன் சோழக்கோன் - (256/1919)
2. புவநேகவாகு தேவர் - (258/1919)
3. இராஜராஜ காங்கேயன் - (262/1919)
4. சோமய தண்ணாயக்கர் - (267/1919)

5. கண்டாரக்கூளி - (268/1919)
6. தூணாண்டார் ஆற்றூராழார் - (269/1919)
7. திருநல்லிக்கிழான் நல்ல கம்பன் தென்னவராயன் - (271/1919)
8. பொன்னன் அச்சிறுவன் - (273/1919)
9. புவன சோரன் - (273/1919)
10. திருப்பணி நாச்சியார் - (284/1919)
11. கிருஷ்ணய்யா - (285/1919)

சிறப்புச் செய்திகள்

ஊரமைப்பு

விசயநகரர் காலக் கல்வெட்டு (266/1919) ஒன்று அடியவர் ஒருவருக்கு மனை நிலம் கொடுப்பதைக் குறிப்பிடும் பொழுது, அய்யனுக்கு வாய்த்தான் தெரு மேற்சிறகில் தன் மனையும், மனைப் படப்பையும் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது. இதன் மூலம் தெருக்களுக்கு பெயர் வைத்திருந்தனர் என்பதும், அந்த தெருக்கள் தெற்கு வடக்காக இருந்தன என்பதும், மேற்கிலும், வடக்கிலுமாக வரிசையாக வீடுகள் அமைக்கப் பட்டு, இவ்வரிசைகள் மேற்சிறகு, கீழ்ச்சிறகு என்று அழைக்கப் பட்டன என்பதும் அறியப்படுகிறது. தொடக்கத்திலிருந்து வீட்டு மனைகள் திசைகளுடன் குறிப்பிடப்பட்டு தென்தலை மனை, வடதலை மனை என்று அழைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. வீடு கட்டும் மனைகளில் இருந்த சிற்றரசுகள் தனியாட்சி பெற்றன. தனியாட்சி பெற்ற இந்த சிற்றரசுகள் சோழ அரசுக்குக் கட்டுப்படாமல் தங்களுக்குள்ளேயே மோதிக் கொண்டன. இதன் காரணமாக ஆங்காங்கு சில சிற்றரசுகள்

தங்களுக்குள் கூட்டு ஏற்படுத்திக்கொண்டு பிற சிற்றரசுகளை தங்களுக்குள் கூட்டு சேர்த்துக்கொண்டதை வெளிப்படுத்துவதற்காக 'நிலமைத் தீட்டு' என்னும் உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொண்டனர். சிற்றரசர்களுக்கான இந்த உடன்படிக்கை செங்கேணி அத்திமல்லனின் இரண்டு கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

குலோத்துங்க சோழனின் 44-ஆவது ஆட்சி ஆண்டில் (254/1919) செங்கேணி வீரசோழ அத்திமல்லனான குலோத்துங்கசோழ சம்புவராயர்க்கு, நாராயணன் கட்டடப் பகுதி தவிர எஞ்சிய பகுதி மனைப் படப்பையாக வழங்கப் பட்டது என்று அறியப்படுகிறது.

சக வருடம் 1325-ஐச் சேர்ந்த (257/1919) மற்றொரு கல்வெட்டு கோயில் அடிகுடியாகிய பணியாளர்களுக்கு மேலைத் தெருவில் கீழ்சிறகில் கலிங்கராயன் மனைக்கு வடபக்கத்தில் 32 அடி அளவுள்ள மனை நிலம் கொடுக்கப் பட்டதைச் சொல்கிறது. எனவே வீட்டு மனைகள் அளக்கப்பட்டிருந்தன என்பதையும், அவை 'காலிங்கராயன் மனை' என்பதைப் போல பெயரிட்டு வழங்கப்பட்டன என்பதையும் அறியமுடிகிறது.

மற்றொரு கல்வெட்டு (258/1919) மடத்தின் கண்காணியான புவநேகவாகு தேவர் என்பவர்க்கு ஒரு வீட்டு மனை விற்கப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டுள்ளது.

குற்றங்களும் தண்டனைகளும்

ராஜாக்கல் பாறையில் உள்ள நான்கு கல்வெட்டுகள் (273, 274, 275, 279/1919) வேட்டையாடிய போது இறந்தவர்கள் பற்றிய செய்திகளைச் சொல்கின்றன. குலோத்துங்க சோழன் காலத்தில் பனையூர் நாட்டு நரியம்பாக்கத்தைச் சேர்ந்த புவன

சோரன் என்பவன் ஒரு மானைக் குறி வைத்தபோது கைத்தவறுதலாக அந்த அம்பு ஒய்மா நாட்டு சங்கரப் பாக்கத்தைச் சார்ந்த பொன்னன் அச்சிறுவன் மீது பட்டு பொன்னன் இறந்து போனான். இந்த தவறை அவன் அறியாமல் செய்திருந்தபோதிலும் அக்னீசுவரர் கோயிலில் ½ நந்தா விளக்கு எரிப்பதற்காக 48 ஆடுகள் கொடுத்திருக்கிறான் என்ற விவரம் அறியப்படுகிறது.

குலோத்துங்க சோழனின் மற்றொரு கல்வெட்டு (274/1919) இதே போல் ஒரு நிகழ்ச்சியை சொல்லி ¼ விளக்கு எரிக்கப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளது. இது போலவே மேலும் இரண்டு கல்வெட்டுகள் ¼, ¼ விளக்குகள் குலோத்துங்கன் காலத்தில் எரிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன.

உடன்படிக்கைகள்

இராசாதிராச சோழன் காலத்தில் செங்கேணி மிண்டன் சீயன் பல்லவாண்டான் ஆன சம்புவராயனும், செங்கேணி அத்திமல்லனாகிய இராசேந்திர சோழ சம்புவராயன் ஒதுவான் ஆன இராசகம்பீர சம்புவராயனும் தாங்கள் எழுதிய உடன்படிக்கையை மீறி நடக்க மாட்டோம் என்று ஒப்புதல் அளித்துள்ளனர் (252/1919).

பாடல் கல்வெட்டுகள்

இவ்வூரில் இரண்டு பாடல் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒரு பாடல் கல்வெட்டு (268/1919) ஆசிரியப்பாவால் இருபது அடிகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. "பூமேவு தாரளகம்" என்று தொடங்கி "அனைவரும் தொழவே" என்று முடிகிறது. "கலிதீரக் கம்பனரன் பலவழித்துச்

சம்பனையும் கைக்கொண்டு" என்ற பாடலின் மூலம் கண்டாரக்கூளி நாயக்கன் கோபுரம் எடுத்த செய்தி அறியப் படுகிறது.

மற்றொரு கல்வெட்டு (263/1919) அம்மன் கோயிலில் வெட்டப்பட்டுள்ளதாகும்.

சிறைப்பிடித்து வெற்றிச் சின்னமாக எடுத்தல்

கண்டாரக்கூளி மாராய நாயக்கன் சம்புவராயரைத் தோற்கடித்து, அவரைச் சிறைப்பிடித்து சம்புவராயர் மலையாகிய ராஜகம்பீர மலையைக் கைப்பற்றி, தன் வெற்றிச் சின்னமாகக் கட்டிய கோபுரம் பற்றிய குறிப்பு (268/1919), "காசினியும் கலிதீரக் கம்பனரன் பல வழித்துச் சம்பனையும் கைக் கொண்டு" என்ற பாடல் வரிகள் மூலம் அறியப்படுகிறது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்கச் செய்தியாகும். இப்படி வெற்றியின் நினைவாக ஜயஸ்தம்பம் நாட்டிய பல்லவர்கள் மற்றும் கங்கை வெற்றிக்குக் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் எடுத்த இராசேந்திர சோழன் வரிசையில், இக்கோபுரமும் ஒரு நினைவுச் சின்னமாகும்.

பிற்சேர்க்கை

மடத்தைச் சுற்றியுள்ள ஊர்கள்

தடாகம் (குளம்)

மடம் கிராமத்தில் உள்ள தடாகமானது இறைவனின் கட்டளைப்படி வெட்டப்பட்ட தெப்பம் என்று குறிப்பிடுகின்றனர். இது சுமார் 10 மீட்டர் ஆழமும், 100 சதுர மீட்டர் பரப்பளவையும் கொண்டு சதுரமாக, கற்களால் அடுக்கிக் கட்டப்பட்ட ஒரு புனிதமான தெப்பமாகும்.

இங்குள்ள மக்கள் இந்தத் தெப்பத்தில் உள்ள தண்ணீரைக் குடிக்க மட்டும் பயன்படுத்துகிறார்கள். இங்கு ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டவோ, மனிதர்கள் குளிக்கவோ கூடாது எனக் கட்டுப்பாடு வைத்துள்ளனர். இந்தக் குளத்தில்தான் தெப்பத்திருவிழாவை முன்பு நடத்தியுள்ளனர். இந்த தெப்பத்தின் நீரைப் புனிதமானதாகக் கருதி மக்கள் அருந்துகிறார்கள்.

வெங்காலம்மன் குட்டை

மடம் கிராமத்திலிருந்து வடக்கில் ½ கிலோ மீட்டர் தூரத்தில் வெங்காலம்மன் குட்டை சாலையை ஒட்டி மேற்புறத்தில் அமைந்துள்ளது. குட்டையில் உள்ள சிறிய பாறையில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டு விசயநகர மன்னர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

கல்வெட்டு வாசகத்தின் ஒருபகுதி

"குளந்தை ஆண்டார் கோயிலில் தேவரடியாரில் அண்ணாமலை(யாம்) திருப்பணி நாராயண வத்திக்குளம் யடிழடி" என்று உள்ளது (284/1919).

அண்ணாமலைக் குட்டை

மடம் கிராமத்திற்கு வடமேற்கில் ¾ கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைக் குட்டையில் கல்வெட்டு ஒன்று உள்ளது. சக வருடம் 1494-இல் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில் நான்கு நுந்தா விளக்குகள் எரிக்க நிலம் தானம் கொடுத்த செய்தி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அய்யப்பன் குளம், சுடுகாட்டு குட்டை, கிருஷ்ணதாஸ் குளம், பனிச்சவன் குட்டை, பீம முதலிக் குட்டை, முனிக் குட்டை, தாமரைக் குட்டை ஆகியவை இவ்வூரில் உள்ள நீர் நிலைகளாகும்.

ராஜாக்கல்

தடாகபுரீஸ்வரர் கோயிலுக்கு தென் பகுதியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளியின் வளாகத்தை ஒட்டி ராஜாக்கல் எனும் பாறைக் காணப்படுகிறது. ராஜாக்கல் என வழங்கப்படும் இப்பாறையில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகள் எட்டு உள்ளன.

ராஜாக்கல்லின் கிழக்குப் பகுதியில் உள்ள பாறையில் புடைப்புச் சிற்பமாக துர்கை சிற்பம் ஒன்று உள்ளது. நான்கு கரங்களைக் கொண்டு இது விளங்குகிறது. முன்னிரு கரங்கள் அபய, ஊரு ஹஸ்தத்துடனும், பின்னிரு கரங்களில் சக்கரம், சங்கு ஏந்தியும், தலையில் கரண்ட மகுடம் தரித்தும்,

காதுகளில் பத்ர குண்டலம் அணிந்தும், மார்புக்கச்சையும், இடைக்கச்சையும் அணிந்துக் காணப்படுகிறது. இடைக் கச்சையின் கடிபந்தம் தடித்த துணியாக உள்ளது. அதனருகில் சிறிய கல்லால் ஆன கோயில் ஒன்று பழுதடைந்த நிலையில் தூண்களுடன் காணப்படுகின்றது. இக்கோயில் ஆரம்ப காலத்தில் வழிபாட்டில் இருந்திருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

சறுக்காம் பாறை

மடம் கிராமத்திலிருந்து தெற்கே ½ கிலோ மீட்டர் தூரத்தில் தென்னாற்றூர் செல்லும் சாலையை ஒட்டி சறுக்காம் பாறை அமைந்துள்ளது. சுமார் 10 அடி உயரம் கொண்ட இந்தப் பாறையில் காலத்தால் முற்பட்ட, பல்லவ மன்னன் விசய கம்ப விக்கிரமனின் 26-ஆவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு காணப்படுகிறது.

கல்வெட்டு வாசகத்தின் ஒரு பகுதி

"குளத்தூர் வாணியர் சயவல்லவன் குளத்தூர் ஊரார் பக்கல் விற்றுக் கொண்டு ஏரிப்பட்டி செய்த சழையாப்பாறை" என்று குறிக்கப்பட்டுள்ளது (283/1919).

இசாகுளத்தூர்

இசாகுளத்தூர் எனும் கிராமம் மடத்திற்கு மேற்குத் திசையில் ½ கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் சமணர் கோயிலான வர்த்தமான சாமி கோயில் சிறப்பு வாய்ந்த கோயிலாகத் திகழ்கிறது.

கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம், மகாமண்டபம் ஆகிய அமைப்புகளுடன் இக்கோயில் அமைந்துள்ளது. கருவறையின் மேல் ஒரு சிறிய விமானம் அமைந்துள்ளது. விமானம் இரு தள வேசர விமான வகையைச் சார்ந்ததாகும். கோட்டத்தில் தெய்வங்கள் ஏதுமில்லை.

அதிட்டானம், பித்தி, வேதிகை, வரி ஆகியவை கல்லாலும், மேற்பகுதி செங்கற்களாலும் கட்டப்பட்டுள்ளது. கருவறையில் பிரம்ம தேவர் சிற்பமும், வெளியே தர்மதேவி, ஸ்ரீதேவி சிற்பங்களும் உள்ளன. மேலும் இக்கோயிலில் பஞ்ச பரமேஷ்டி, பஞ்ச கல்யாணி சிற்பங்களும் உள்ளன.

கோயில் பெரிய திருச்சுற்று மதிற் சுவரைக் கொண்டு விளங்குகிறது. கோயில் சுற்றுப்பிரகாரத்தில் குடி தண்ணீர் கிணறு ஒன்றும், மடப்பள்ளி ஒன்றும் காணப்படுகின்றன. கோயில் கருவறைச் சுவரில் "பொய் குளம் விழுப்பரையர் பிரெவிக் கோத்திரத்துள்ளார் தன்மம்" என்று பொறிக்கப் பட்டுள்ள 16-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

சோலை அருகாவூர்

சோலை அருகாவூர் கிராமம் மடத்திற்கு வடகிழக்கில் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு சமணர்களின் தெய்வமான மகாவீரருக்கான கோயில் ஒன்று உள்ளது.

இக்கோயில் கருவறை, முன்மண்டபம், மகா மண்டபம் என அமைந்துள்ளது. உபபீடம் கல்லாலும், அதிட்டானம் முதல் சிகரம் வரை செங்கல் சுதையாலும் ஆன இக்கோயில் விமானம் மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. தெய்வங்கள் இல்லாத தேவகோட்டங்கள் அமைந்துள்ளன. ஒரு திருச்சுற்று மதிலும், கருங்கல் வாயிலும் இங்கு உள்ளன. இங்கு மகாவீரரின் கற்சிற்பமும், செப்புத்திருமேனியும் மற்றும் பிற தீர்த்தங்கரர்களின் செப்புத் திருமேனிகளும் இக்கோயிலில் காணப்படுகின்றன.

கல்வெட்டு வாசகங்கள்

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சிஆண்டு	: சகம் 1285
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: கி.பி.14-ஆம் நூற்றாண்டு
ஊர்	: மடம்	இ.க.ஆ.அறிக்கை	: 228/1918-19
மொழி	: தமிழ்		
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்		
அரசு	: விசயநகரர்		
அரசன்	: கம்பண உடையார்		
இடம்	: தடாகபுரீஸ்வரர் கோயில் கருவறை வடசுவர்		

குறிப்பு : சோமய தண்ணாயக்கரின் குமாரனான கண்டார கூளிமாராய நாயக்கரால், மடத்து உடையார் குளந்தை ஆண்டார் கோயிலில் மடபதி மாஹேஸ்வரரான புவனேகவாகு தேவர்க்கு வரிநீக்கம் செய்யப்பட்ட நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேஸ்வரந் ஹரிராய விபாடன் மூவராயர் கண்டன் *பூர்வ்வ பஸ்சிம* தெக்ஷின *ஸமுத்ராதிபதி* ஸ்ரீவொக்கண உடையார் குமார ஸ்ரீகம்பண உடையார் *ப்ருதிவிராஜ்ய*ம் பண்ணு நின்ற *ஸகாப்தம்* ஆயிரத் திருநூற்று என்பத்தைஞ்சின் மேற் செல்லா நின்ற *ஸோபக்ருதி ஸம்வத்*ஸரத்து *தை மா* நாயிற்று *பூர்வ*

வக்ஷத்து *த்ரயொதெஸியுடீ* வெள்ளிக் கிழமையும் பெற்ற ரேவதி நாள் *ஸ்ரீமநு மஹாமண்டலீஸ்வர* தண்ணாயக்கர் குமார *ஸ்ரீமநு* கண்டர் கூளிமாய நாயக்கர் மடத்து உடையார் குளந்தை ஆண்டார் கோயிலில் மடபதி *மஹெஸ்வர*ரில் அழகிய திருச்சிற்றம்பலமுடைய ஐய்யனுக்கு வாய்த்த புவநேகவாஹூ தெவர்க்கு காணி மடப்புறம் இறையிலியாகக் குடுத்த அண்ணமங்கலப்பற்று வடபிடாகை எட்டி ஏந்தல் நன்சை புன்சை நத்தம் ஏரிவாய் புரவடை நாற்பால்கெல்லையும் ஸர்வமானிய இறையிலியாக குடுத்த அளவுக்கு கடமை பொன் வரியும் பல வரிகளும் பல உபாதிகளும் அரிசி காண்டர் மாவடை மரவடை ஆயம் மற்றும் இப்பற்றில் கொள்ளும் பல வரிகளும் பல உபாதிகளும் உட்பட ஸர்வமானிய இறையிலியாக சந்த்ராதித்தவரையும் செல்ல உடையார் குளந்தை ஆண்டார் கோயிலில் திருக்கட்டளையிலே கல்லு வெட்டிக் குடுத்தோம்

மாவட்டம் : திருவண்ணாமலை

ஆட்சிஆண்டு : சகம் 1355

வட்டம் : வந்தவாசி

வரலாற்று ஆண்டு : கி.பி.15-ஆம் நூற்றாண்டு

ஊர் : மடம்

இ.க.ஆ.அறிக்கை : 229/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : விசயநகரர்

அரசன் : வீரப்பிரதாப தேவராய மஹாராயர்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் கருவறை வடசுவர்

குறிப்பு : திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலின் கைக்கோளரான அமரகோனார் குளந்தை ஆண்டாற்கு, திருமுகக்காணி கொடுத்த செய்தியும், இவரது தமக்கை அறம் வளர்த்த நாச்சியார், மீஸ்ர கண்ட மாணிக்கம் தேவராய மஹாராயரைச் சந்தித்து, இக்கோயிலுக்காக தானம் பெற்றதையும், இந்த தானம் பற்றிய குறிப்பு செப்பேட்டில் எழுதப்பட்ட விவரமும், இவற்றை எழுதியவர்கள் தில்லை நாயக பட்டன், திருச்சிற்றம்பல பட்டன், பரமேஸ்வர பட்டன், குனிக்கும்பிரான் பட்டன் எனும் செய்தியும் அறியமுடிகிறது.

கல்வெட்டு :

*ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமநு மஹாம*ண்டலிசுரநு ஹரியராய விபாடநு பாஷைக்குத் தப்புவராயர் கண்டந் மூவராயர் கண்டநு *வீரப்ர*தாவ தேவராயர் மஹாராயர் *ப்ருதிவிராஜ்யஂ* பண்ணி அருளாநின்ற *ஶகாப்தம் ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்து* ... மேல் செல்லாநின்ற *ப்ரமாதி* ஸம்வத்ஸரத்து கும்ப நாயிற்று பூர்வ பக்ஷத்து தெசமியும் திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் அண்ணமங்கலப்பற்று மடம் உடையார்

திருவக்னீஸ்வரமுடையர் மஹாதேவர் கோயில் கைக்கோளரில் அமரகோனார் குளந்தை ஆண்டாற்கு திருமுக்காணி குடுத்தபடி இவர் தமக்கைய் அறம் வளத்த நாச்சியர் மீஸர கண்ட மாணிக்கம் தேவராய மஹாராயரைக் கண்டு இக்கோயில் சறுவமாந்யம் பண்ணி செப்பேடும் வாங்கி வருகையில் இதுக்கு ஒரு முதல் கணக்கு எழுதி மாட்டெறும் இட்டு நாள் ஒன்றுக்கு இரண்டு பணமும் அசல் கணக்கு அற்ற மதிகாரி இலக்கையும் பெற்று சந்த்ராதித்யவரையும் நடத்தக் கடவதாகவும் இக்காணி விற்றும் ஒற்றி வைத்தும் மற்றும் உண்டாந தானதன்ம பரிக்கிறையங்களுக்கும் உரித்தாக கடவதாகவும் இப்படிக்கு இக்காணி ஆட்சி கொடுத்தோம் இக்கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேஸ்வரரோம் இவை தில்லைநாயக பட்டன் எழுத்து இவை திருச்சிற்றம்பல பட்டன் எழுத்து இவை வாகீஸ்வர பட்டன் இவை குனிக்கும்பிரான பட்டன் எழுத்து

மாவட்டம் : திருவண்ணாமலை — ஆட்சிஆண்டு : 7

வட்டம் : வந்தவாசி — வரலாற்று ஆண்டு : -

ஊர் : மடம் — இ.க.ஆ.அறிக்கை : 230/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : பாண்டியன்

அரசன் : மாறவர்மன் விக்கிரமபாண்டியன்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் கருவறை வடசுவர்

குறிப்பு : திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலின் ஆனித் திருநாள் பூசைகளுக்காக, மழஊர் மற்றும் கோதண்டபுரம் ஆகிய இரண்டு கிராமங்களைத் தானமாக வழங்கிய செய்தியும், இத்தீர்மானம், தென்னாற்றூரில் சபையின் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற செய்தியையும் அறியமுடிகிறது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரம பாண்டிய தேவற்கு யாண்டு எ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர் ஆளுடையார் திருவக்னீஸ்வர முடைய மஹாதேவற்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து அண்ணமங்கலப்பற்று நாட்டவரும் அகம்படியாரும் அகம்படி முதலிகளும் பன்நாட்டவரும் பல முதலிகளும் தென்னாற்றூரில் நிறைவற நிறைந்து குறைவற கூடி எம்மிலிசைந்து இத்திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவற்கு திருஆனித் திருநாள் எழுந்தருளவும் பூசைகளுக்கும் மற்றும் வேண்டும்

அழிவுகளுக்கும் நாங்கள் தேவதானமாக விட்ட மழஊரும் கோதண்டபுரமும் நாற்பேரெல்லைக்குள்பட்ட நன்சை நிலங்களும் புன்சை நிலங்களும் ஏரியும் புறவடை புறக்கலனையும் மற்றும் எப்பேற்பட்டனவும் தேவதானமாக இறையிழிச்சி இவற்றால் வந்த கடமைகளும் காசு ஆயங்களும் நெல்லாயங்களும் மற்றும் எப்பேற்பட்ட வரிகளும் இன்னாயனாற்கு திருஆனித் திருநாளுக்கு பூசைகளுக்கும் மற்றும் வேண்டும் அழிவுகளுக்கும் இறையிழிச்சி தேவதானமாக விட்டோம் அண்ணமங்கலப் பற்று நாட்டவரும் அகம்படியாரும் அகம்படி முதலிகளும் இவ்வனைவரோம் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சிஆண்டு	: 7
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: கி.பி.14-ஆம் நூற்றாண்டு
ஊர்	: மடம்	இ.க.ஆ.அறிக்கை	: 233/1918-19
மொழி	: தமிழ்		
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்		
அரசு	: சம்புவராயர்		
அரசன்	: இராசநாராயண சம்புவராயர்		
இடம்	: தடாகபுரீஸ்வரர் கோயில் கருவறை தென்சுவர்		

குறிப்பு : குளந்தை ஆண்டார் கோயிலுக்கு மெய்க்காவலர்களை நியமித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஶ்ரீ ஸகலலோக சக்கரவத்திகள் ஸ்ரீ இராச நாரயணன் சம்புவராயற்கு யாண்டு எ வது மேஷ நாயற்று பூர்வ பக்ஷத்து த்ரயோதசி புதன் பெற்ற உத்திரம் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்துத் தென்னாற்றூர் நாட்டு உடையார் குளந்தை ஆண்டார் கோயிலில் ஶ்ரீருத்ர ஶ்ரீமாஹேஶ்வரரோம் இக்கோயில் . . . . ண்டார்களில் அய்யனுக்கு வாய்த்த புவனேகவாகு தேவர் மகன் சமையத்தாற்கு இக்கோயிலில் திருமெய்காவல் இன்னாள் முதல் சந்த்ராதித்தவரையும் செல்ல காணிஆக குடுத்தோம் உடையார் குளந்தை ஆண்டார் கோயில் ஶ்ரீருத்ர ஶ்ரீமாஹேஶ்வரரோம்

எழுத்து நாற்பத் தெண்ணாயிறப் பட்டன் எழுத்து அம்மையப்பன் எழுத்து பரமேஸ்வர பட்டன் குனிக்கும் பிரான் பட்டன் எழுத்து கோயிற் கணக்கு இளையபெருமாள் ஜெயங்கொண்ட சோழ பிரமாதராயன் எழுத்து

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சிஆண்டு : 5

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : கி.பி.1123

ஊர் : மடம்
இ.க.ஆ.அறிக்கை : 234/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : சோழன்

அரசன் : இரண்டாம் குலோத்துங்க சோழன்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் முன் மண்டப கிழக்குச் சுவர்

குறிப்பு : திருவக்னீஸ்வரமுடையாருக்கு தினசரி பூசைக்கு நிலம் கொடையாக வழங்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ரு ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப்

2. பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் னாட்டுக் குளத்தூர் திருவஷ்நீஸ்வரமுடையார்க்கு திருப்படி மாற்றுக்கு செங்

3. கேணி நாலயிரவந் அம்மைஅப்பனாநன ராஜேந்த்ர சோழச் சம்புவராயிநேன் குளத்தூர் காணி உடைய வாணிய களபக்க

4. ல் கொண்டு விட்டனிலம் ஏரி ஏரிப் பள்ளத்தூம்பின் கீழ்ப்பள்ள வாக்காலுக்கு வடக்கும் ஏரிக்கரைக்கு கிழக்கும் கூரத்தாழ்வார் மடப்

5. புறத்துக்கும் பெரிறைக்கும் தெற்கும் . . . . செறுபழ பட்டிக்கு மேற்கும் இந்நாற்பேரெல்லைக்கு முட்பட்ட நிலத்துக்கும் இத்தூம்பிற

6. த் தூம்பிற் தலைநீர் கடைநீர் பாயக் கடவுதாகவும் இன்னிலத்துக்கு இறையென்றும் எச்சோற்றுக் கூற்று நெல் வெட்டி மு

7. ட்டாமஎ் என்று செய்யக் கடவதல்லாத்தாகவும் இப்படி இன்னாற்பாற் கெல்லைக்கும் உட்பட்ட நிலத்துக்கும் பொன்நீற் இட்டு

8. மண்ணறக் கொண்டு விட்டேன் செங்கேணி நாலாயிரவன் அம்மை அப்பநான ராஜேந்த்ர சோழச் சம்புவராயநேந் இ

9. து பந்மாஹெஸ்வர ரக்ஷை||

மாவட்டம் : திருவண்ணாமலை ஆட்சிஆண்டு : சகம்.1329

வட்டம் : வந்தவாசி வரலாற்று ஆண்டு : கி.பி.15-ஆம் நூற்றாண்டு

ஊர் : மடம் இ.க.ஆ.அறிக்கை : 236/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : விசயநகரர்

அரசன் : வீர புக்கண்ண உடையார்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் முன் மண்டப கிழக்குச் சுவர்

குறிப்பு : அக்னீஸ்வரமுடைய மஹாதேவர்க்கு காசுக்கான வரியும், நூல் நெய்வதற்கான வரியும், நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கான வரிகளும் நீக்கம் செய்யப்பட்டு இவை அனைத்தும் மல்லிநாதன் என்பவரால் கொடையாக அளிக்கப்பட்டது என்ற செய்தி அறியமுடிகிறது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வரந ஹரிஹராய விபாடந பாஷெக்கு தப்புவராயர் கண்டன் *சது ஸ்ஸமுத்ராதிபதி* ஸ்ரீவீரஹரியண உடையார்க்கு செல்லா நின்ற *ஸகாப்த* ௲௩௱௨௰௯-ன் மேல் செல்லா நின்ற *ஸர்வஜித்* வருஷத்து முதலுக்கு அண்ணமங்கலப் பற்று குளத்தூர் ஆளுடைய நாயனார் திரு*வக்னீஸ்வர*முடைய *மஹாதே*வர்க்கு உடையார் திருமேனிக்கு . . . . . பழைய தேவதானம் ஆன மழவூர் நத்தமும் ஏரியும் காசாயங்களும் நூலாயமும் நன்சை புன்சை நாற்பாற் கெல்லையும் *சந்த்ராதித்த*வரையும் செல்ல *ஸர்வமாந்ய* இறையிலி ஆக குடுத்தேன் திருமல்லிநாதநேன்

மாவட்டம் : திருவண்ணாமலை ஆட்சிஆண்டு : 6

வட்டம் : வந்தவாசி வரலாற்று ஆண்டு : கி.பி.1124

ஊர் : மடம் இ.க.ஆ.அறிக்கை : 237/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : சோழன்

அரசன் : விக்கிரம சோழன்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் முன் மண்டப கிழக்குச்சுவர்.

குறிப்பு : 'பூமாது புணர...' என்று மெய்க்கீர்த்தியுடன் இக்கல்வெட்டு தொடங்குகிறது. குளத்தூர் திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு வரிவிலக்கு செய்து நிலம் விற்கப்பட்ட செய்தியும், அதன் எல்லைகளும் இங்கு தெரியவருகிறது.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* பூமாது புணரப் புவிமாது வளர நாமாது விளங்க சயமாது விரும்பத் தன்னிருபத மலர் மன்னவர் சூடி
2. மன்னிய உரிமையில் மணிமுடி சூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக்
3. கலிங்கம் இரியக் கடல்மலை நடாத்தி வலங் கொள் ஆழி வரை ஊழிநடாத்தி இரு சுடராளவமொரு குடை நிழற்கீழ் செம்பொன் வீர*ஸிம்ஹாச*ன
4. த்தும் புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவற்கு யா

5. ண்டு ௯ ஆவது ஜயங்கொண்டசோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்தூர் ஊரோம் சளுக்கியில் -பரண

6. யந் சாத்தந்தை அரைய மீகாமங்ககுக் குளத்தூர் கோயிலுக்கு கிழக்கு நிரந்பந்தில் திருவக்கினீசுவர முடைய மகாதேவர்க்கு மடப்புற

7. மாக இறையிழிச்சி விற்று குடுத்த பரிசாவது இந்நிலத்துக்கு தென்பாற்கெல்லை எல்லை வாய்ச் செறுவுக்குத் தெற்கிற் குண்டிலிரண்டு

8. க்கும் தெற்கில் கள(ரு)ங்கல்லா சறுதியாகவும் மேல்பாற்கெல்லை சாம்புவாந் காலுக்கு மேற்கு பதிந்கோல் நீளம் சறுதியாகவும் வடபாற்கெல்லை

9. (ல்லை) அருகாவூர் கெல்லையிற்று தியாகவும் கீழ்பாற்கெல்லை அருகாவூரெல்லை மாசறதியாகவும் நடுவுபட்ட நிலம் காடும் மேடும் திருத்திக் கொள்ள

10. கடவுதாகவும் இன்நிலத்துக்கு வேண்டுந் தலைநீர் கடைநீர் பாயகடவுதாகவும் இந்நிலத்துக்கு எச்சோற்றுக் கூற்று நெல் வெட்டி முட்டாமாளெந்று செய்

11. யக் கடவதல்லதாராகவும் (விற்றுக்) கொண்டு மண்ணற விற்று கொடுத்தோம் (நாங்கள்) இது பன்மாஹேஸ்வர ரசைஷ

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சிஆண்டு	: 3
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: மடம்	இ.க.ஆ.அறிக்கை	: 239/1918-19
மொழி	: தமிழ்		
எழுத்து	: கிரந்தங் கலந்த தமிழ்		
அரசு	: சோழன்		
அரசன்	: இராசாதிராசன்		
இடம்	: தடாகபுரீஸ்வரர் கோயில் முன் மண்டபம் வடசுவர்.		

குறிப்பு : திருவக்னீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தி அறியமுடிகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு ௩ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர்

2. நாட்டு குளத்தூர் திருவக்நீஸ்வரமுடைய மகாதேவர்க்கு செங்கேணி அம்மையப்பன் அத்தி மல்லனனான ராஜேந்திரசோழ சம்புவராயநனே

3. இதேவற்கு . . . . குறைவறுப்புக்கு நான் கொண்டு விட்ட நிலம் மாணிக்கமங்கலத்து பிறித்த பிடாரன் ஏந்தலான திருச்சிற்ற

4. ம்பல விளாகம் கீழ்பாற்கெல்லை கோதண்டபுரத்து எல்லைக்கும் மழவூரெல்லைக்கும் மேற்கும் தென்பாற் கெல்லை பந்த மங்கல

5. த்து எல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை ஏந்தல் எதிர்வாய்க்கால் வாவிப் பாறைக்கும் திருவிண்ணகர நின்றான் ஏந்த

6. ல் கரைக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை மாணிக்கம் மங்கலத்துக்கு கிழக்கு தெற்கு கொல்லைக்கு தெற்கில் வட்ட கேணிக்கும் (தென்கிழக்கில்) ஆலங்க

7. தென்கிழக்கில் ஆலங்கொல்லை வடக்கில் பெரிய கல்லுக்கும் தெற்கும் இந்நாற்பாற் கெல்லைக்கு முட்பட்ட நஞ்செய் புஞ்செய் விளைநிலம் . . . .

மாவட்டம்	: திருவண்ணாமலை	ஆட்சிஆண்டு	: 13
வட்டம்	: வந்தவாசி	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: மடம்	இ.க.ஆ.அறிக்கை	: 240/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : பாண்டியன்

அரசன் : சடாவர்மன் சுந்தரபாண்டியன்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் கருவறை வடமேற்குச் சுவர்கள்.

குறிப்பு : குளத்தூர் திருவக்னீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் தினசரி பூசைக்காகவும், திருவிழாவின்போது இறைவன் உலா வருவதற்காகவும் வரி நீக்கம் செய்யப்பட்ட நிலங்கள் தானமாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடை பன்மரான *த்ரிபு*வனச் சக்ரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு ௰௩ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு குளத்து ஆளுடையார் திருவக்கினிசுரமுடைய மஹாதேவர்க்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து அண்ணமங்கலப்பற்று நாட்டவரும் அகம்படியாரும் அகம்படி முதலிகளும் பன்நாட்டவரும் பன்முதலிகளும் தென்னாற்றூரில் நிறைவற நிறைந்து குறைவரக் கூடி எம்மில் இசைந்து இத்திருவ*க்நீஸ்வர*முடைய *மஹா*தேவர்கு திருப்படி மாற்றுக்கும் மற்றுமுள்ள பூசைகளுக்கும் நாட்டுக்குத் திருநாளாகத் திருநாள்

எழுந்தருளுவிக்கவும் இக்கோட்டத்து இன்னாட்டு ஆழியுரை தேவதானமாக இறைஇழிச்சிக் கொடுத்தோம் அண்ணமங்கலப்பற்று நாட்டவரும் அகம்படியாரும் அகம்படி முதலிகளும் பன்நாட்டவரும் பன்முதலிகளும் இவ்வனைவரோம் இவ்வாளியூர் நாற்பாற்கெல்லை உள்பட்ட நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் நத்தமும் ஏரியும் ஏரி மீன் பாட்டமும் தறி இறை தட்டார்ப்பாட்டமும் மாவடை மரவடை மற்றும் எப்பேற்பட்ட வரிகளும் கடமைகளும் பலவற்கத்து காசாயங்களும் நெல் ஆயங்களும் எப்பேற்பட்ட ஆயங்களும் இவ்வுடல்கள் எல்லாம் இத்திருவக்கிநிசுரமுடைய *உஹா* தேவற்க்குத் திருப்படி மாற்றுக்கும் பூசைகளுக்கும் நாட்டுத் திருநாள் எழுந்தருளுவிக்க இறை இழிச்சிக் கொடுத்தோம் இன்னாட்டவரும் அகம்படியாரும் அகம்படி முதலிகளும் பன்நாட்டவரும் பன்முதலிகளும் இவ்வனைவரோம் இது பன்*ஊாஹெஶ்வர ரகெ்ஷ*

மாவட்டம் : திருவண்ணாமலை
ஆட்சிஆண்டு : -

வட்டம் : வந்தவாசி
வரலாற்று ஆண்டு : -

ஊர் : மடம்
இ.க.ஆ.அறிக்கை : 243/1918-19

மொழி : தமிழ்

எழுத்து : கிரந்தங் கலந்த தமிழ்

அரசு : விசயநகரர்

அரசன் : கம்பண்ண உடையார்

இடம் : தடாகபுரீஸ்வரர் கோயில் முன் மண்டப மேற்குச் சுவர்

குறிப்பு : குளந்தை ஆண்டார் கோயிலில் மாஹேஸ்வரரான புவனேகவாகு தேவரைக் கோயில் கணக்காளராக நியமித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

ஸ்வஸ்திஸ்ரீ உது உஹாஉணெ்ஶ்வரது ஹரிராய வி*வா*டன் *ஹா*ஷைக்குத் தப்புவராயர கண்டன் *வ*ூ*வ*ு *வஶ்ரீஉ* ஸமு*த்ராயிவதி* ஸ்ரீவீரபொக்கண உடையார் குமாரர் கம்பண உடையார்க்கு செல்லா நின்ற ப*ராவவ* ஸ*ம்வத*சரத்து தனுநாயற்று அமரபக்ஷம் ஏகாதசியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற சோதி நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர் நாட்டு உடையார் குளந்தை ஆண்டார் கோயிலில் *ஸ்ரீ ருத்ர ஊாஹெஶ்வர*ரோம் இக்கோயிலில் *ஊாஹெஶ்வர*ரில் புவனேகவாகுதேவர் மகனார் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அய்யனுக்கு வாய்த்த புவனேகவாகு தேவர்க்கு இக்கோயிலில் ஸ்ரீ*ஊாஹெஶ்வர*க் கணக்கு காணி ஆட்சி ஆக குடுத்தோம் இவர்க்கு நாங்கள் குடுத்த *ஸ்ரீஊாஹெஶ்வர*க் கணக்கு . . . ஒற்றி வரிகய . . .*ஷாந* தன்மங்களுக்கும் உரித்தாவதாகவும் நாங்கள் குடுத்த *ஸ்ரீ ஊாஹெஶ்வர*க் கணக்கு ச*ந்த்ரா*தி*த்தவரையுஞ் செல்ல குடுத்தோம் *ஸ்ரீ ருத்ர ஊாஹெஶ்வர*ரோம் இவை நில. . . . பட்டன் எழுத்து

மாவட்டம் : திருவண்ணாமலை ஆட்சிஆண்டு : 6

